விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 17 திங்கட்கிழமை (02.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ்.–கொழும்பு பயணிகள் விமான சேவை இந்த வருட இறுதிக்குள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இந்த வருட இறுதியில் கொழும்பு கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கும் பலாலி விமான நிலையத்திற்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன.

இந்தச் சேவைகளுக்காக 50 இருக்கை களைக் கொண்ட விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திசேரா தெரி வித்துள்ளார்.

குடாநாட்டில் வாழும் தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கு அமையவே இந்தச் சேவை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்கத்தில் ஒரு சேவை மட்டுமே இடம் பெறவுள்ளது. மேலதிக சேவைகள் மக்கள் தேவைக்கு அமைய அதிகரிக்கப்படும்.

அதேவேளை இந்தச் சேவைக்காக சாதா ரண கட்டணங் (02 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு சீனா மூலம் நிபுணத்துவப் பயிற்சி

(கொழும்பு)


ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு சீனா மூலம் நிபுணத்துவப் பயிற்சி வழங்கப்பட வுள்ளது. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பிரதானி யாக இருந்து வந்த மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் சீனா சென்றுள்ளார்.

விசேட நிபுணத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே அவர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று ஜனா திபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போது வெற்றிடமாக வுள்ள அவரின் பதவிக்கு மேஜர் ஜெனரல் சாஹிகால்கே உடனடியாக நியமிக்கப்பட் டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் சீனாவி லிருந்து திரும்பியதும் இங்குள்ள வீரர்க ளுக்கும் அப் பயிற்சி வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. (ச)

# இந்தியாவின் சிறப்புத் தூதுவர் இவ்வாரம் இலங்கைக்கு வருகை



## இந்திய அமைச்சர் சிதம்பரம் அறிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றப் பணிக ளைப் பார்வையிடுவதற்காக இந்தியாவின் சிறப்புத் தூதுவர் இவ்வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்தியா வின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ப.சிதம்பரம் இத் தகவ லை வெளியிட்டார். (02 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

❖ வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் விபரம்.

❖ பிரபல ஆசிரியர் புன்னியாமீனின் தரம்–05 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்.

## கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரதேசத்தில் மேற்கொள் ளப்பட்ட தீவிர சோதனை நடவடிக்கையின் போது பெருமளவு ஆயுதங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

திருகோணமலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலே யே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீட்கப்பட்ட இவ் ஆயுதங்கள் திருகோணமலை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்க ளில் கிளைமோர்க் குண்டுகள் 38, கைக் குண்டுகள் 45, சி–4 ரக வெடி மருந்து 50 கிலோ, ஆர்.பி.ஜி. (02 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மீண்டும் விரைவில் கூட்டப்படும்

### அதன் தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முக மாக அமைக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு மீண்டும் கூடவுள்ளது. மீண்டும் கூடும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடப்படக் கூடும் என சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நீண்ட காலமாக இருந்து வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக ஜனா திபதியால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு பலமுறை கூடி அதன் அறிக் கையைத் தயாரித்தது.

அந்த அறிக்கை ஜனாதிபதியிடம் பல மாதங்களுக்கு முன்னரே கையளிக்கப்பட்டது என்றெல்லாம் செய்திகள் வெளியாகியிருந் தன.

அரச தரப்பில் அந்த அறிக்கையை வெளியிடாததால் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த இரண்டு உறுப்பினர்களான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நிஷாம் காரியப்பர், தற்போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக இருக்கும் ஆர்.யோக ராஜன் ஆகியோர் (20 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்தார். அங்கு மகா நாயக்க தேரர்களின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார். அத்துடன் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகை யில் வெள்ளரசு மரம் ஒன்றையும் நாட்டினார். மகாநாயக்க தேரரிடம் அவர் ஆசி பெறுவதைப் படத்தில் காணலாம்.

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 85 இலங்கையர்கள் கைதாகினர்

### தமிழர்களே அதிகமாம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முனைந்த 85 இலங்கையர்களை அந்நாட் டுக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடல் மார்க்கமாகக் குறித்த இலங்கையர் கள் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக அந்நாட்டுக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகாமையில் சிறிய படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலிய எல்லைக்குள் பிரவேசிக்க இந்தக் குழுவினர் முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இவ்வாறு அவுஸ்திரேலியாவுக்குள் பிர வேசிக்க முயற்சித்த இலங்கையர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த புகலிடக் (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வண்ணார்பண்ணை ஜீனர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட வணபிதா எஸ்.எஸ்.ஞானராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் பாலர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள் :- சுரேஷ்

# குட்டைப்பாவாடை அணிய பெண்களுக்குத் தடைவிதிப்பு

பிரிட்டனின் உள்ளூராட்சி அலுவலகம் ஒன்றில் பணியாற்றும் பெண்கள் பலருக்கு குட்டைப்பாவாடை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வாடிக்கையாளர்களை எதிர் கொள்ளவேண்டிய பணியிலுள்ள பெண்கள் மிகக் குட்டையான பாவாடை அணிவது தடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு இணங்கி செயற்படாத பெண்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சௌத்தாம்ப்டன் சிற்றி கவுன்ஸிலின் சிறுவர் சேவை திணைக்களத்தில் பணியாற்றும் 400 ஊழியர்கள் கடமைக்கு வரும்போது அணியும் ஆடைகள் குறித்த சுற்றுநிருபங்களைப் பெற்றுள்ளதாக பிரித்தானிய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

தொழிற்சார் உத்தியோகஸ்தர் தோற்றத்தை ஏற்படுத்துவதற்கும் சிறுவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு மதிப்பளிக்கும் நோக்குடனும்பொருத்தமான ஆடை அணியுமாறு அங்கு பணியாற்றும் ஆண்களும் பெண்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆண்கள்கொலர்வைத்த அல்லது போலோ ஷேர்ட் மற்றும் பெல்ட் சகிதம்பருத்தி அல்லது காக்கி துணியில்ான காற்சட்டை அணியலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் நியாயமான அளவுகொண்ட பாவாடை போன்றவற்றை அணியலாம் எனவும் ஆனால் குட்டைப்பாவாடை அணியக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சிலபெண்கள் இத்தடைக்கு எதிராகபோராடப்போவதாகக் கூறியுள்ளனர் நாம் அணிந்திருக்கும் பாவாடையின் நீளம் எவ்வளவு என டேப் வைத்து அளக்கப்போகிறார்களா? என ஒரு பெண் கோபத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

# பாக்கு மென்றால் புற்றுநோய் ஆய்வின் மூலம் கண்டு பிடிப்பு

ஆசியாவின் பல பகுதிகளில் பாக்கு மெல்வது என்பது ஒரு சாதாரண விஷயம். ஆனால் இவ்வாறு செய்வதால் வாய் புற்றுநோய் ஏற்படுகிறது என்றும் அதனால் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கையானது கடந்த 40 ஆண்டுகளில் நான்கு மடங்கு உயர்ந்துள்ளதாகவும் தாய்வான் மருத்துவமனை ஒன்று நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தாய்வானின் சுங்ஷான் மருத்துவப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் வாய் புற்றுநோயால் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேரில் 13 பேர் மரணம் அடைவது தெரியவந்துள்ளது.

தாய்வானின் கிராமப்புறங்களில் பாக்கு மரம் ஒரு பணப்பயிராக வளர்க்கப்படுகிறது. பெருமளவில் பாக்குப்பயிர் செய்யப்படுவதை தொடர்ந்து தாய்வான் மக்களுக்கு பாக்கு மெல்லும் பழக்கம் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. தாய்வானில் இருக்கின்ற ஆண்களில் 14 சதவீதம் பேர்பாக்குமெல்கின்றனர். வாய்புற்றுநோய்க்கு பாக்கு முக்கிய காரணமாக இருக்கிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2100 பேர் வாய் புற்றுநோயால் பலியாகியுள்ளனர். தாய்வானில் ஆண்களின் மரணத்திற்கு நான்காவது முக்கிய காரணமாக வாய் புற்றுநோய் பார்க்கப்படுகிறது.

பாக்கு உபயோகத்தை தடுக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது. ஆனால் கட்டுமானப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், மீனவர்கள் போன்றவர்களிடம் பாக்கு பிரபலமாக இருக்கிறது. கேஃபைன் போன்ற பாக்கும் தங்களை விழித்திருக்க வைக்க உதவுவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

அரசாங்கம் தங்கள் தொலைக்காட்சி, செய்தித்தாள், கல்விசாலைகள், தேவாலயங்கள், கிராமங்கள் போன்றவற்றில் பாக்குக்கு எதிராக செய்யும் பிரசாரத்தால் கடந்த 3 ஆண்டுகளாக இந்தப்பழக்கம் குறைந்திருப்பதாக கூறுகிறது.

ஆனால் வாய் புற்றுநோயால் மரணம் அடைபவர்களின் எண்ணிக்கை குறைய கொஞ்சம்காலமாகும். ஏனென்றால்1970, 1980 களில்பாக்கு மெல்ல ஆரம்பித்தவர்களுக்கு இப்போது புற்றுநோய்வர ஆரம்பித்துள்ளது. (ச-5)

# ஹயஸ்-மோ. சைக்கிள் விபத்து வயோதிபர் உயிரிழப்பு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்குப்பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்ற ஹயஸ் வான், மோட்டார் சைக்கிள் விபத்தில்வயோதிபர்ஒருவர்உயிரிழந்துள்ளார்.

சம்பவதினம் தனது மகளுடன் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த விநாசித்தம்பி சுப்பிரமணியம் (வயது 80) என்றவயோதிபரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (ச-3,2,1)

# நூல் அறிமுக விழா

பேராசிரியர் என்.பாலகிருஷ்ணனின் இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள் ஓர் சமகால மீளாய்வு நூல் அறிமுக விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் கலந்து கொள்வார். இவ்விழாவில் நூல் அறிமுகவுரையை பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் ஆற்றவுள்ளார்.முதல் பிரதியை பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் பெற்றுக்கொள்வார். (ச)

# வடமராட்சியில் விபத்து நால்வர் படுகாயம்

வடமராட்சி கரவெட்டி பிரதேச பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வெவ்வேறு விபத்து சம்பவங்களில் 4 பேர் படுகாயமடைந்த நிலையில்சிகிட்சைக்காகமந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மூவர் மேலதிக சிகிட்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு அல்வாய் வீதியிலுள்ள ஓட வைரவர் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீட்டின் மதிலுடன் வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் மோதி வித்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த மூவர் படுகாயமடைந் தனர். இதில் குடத்தனையை சேர்ந்த அன்ரனி நிக்சன் (வயது 33),

அவருடன் பயணம் செய்த மானிப்பாய் மடத்தடியை சேர்ந்த ஆறுமுகம் ஞானவேல் (வயது 28) இளைஞர் மற்றும் யுவதி உட்பட மூவரே படுகாயம் அடைந்துள்ளனர்.

இதேவேளை சனிக்கிழமை இரவு கரவெட்டி இந்திர அம்மன் கோவிடி பகுதியில் லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் புலோலி வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த சின்னக்கிளி ரவிச்சந்திரன் (வயது 24) என்ற இளைஞர் தலையில் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டார். (ச-3,24)

# யாழ்.-கொழும்பு...

களே அறவிடத் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்-கொழும்பு விமான சேவையில் ஈடுபட்டு வந்த எக்ஸ்போ விமான சேவை முகவர் நிறுவனம் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தனது சேவையை நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கிளிநொச்சியில்...

குண்டுகள் 90 போன்றன காணப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்களைக் கிழக்குப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எடிசன் குணதிலக, திருகோணமலைப் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மலவின்ன பண்டார, திருமலை தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் சரித்த ஏ.வி.ஜெயசுந்தர ஆகியோர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-5)

# இந்தியாவின் சிறப்பு...

இலங்கையில் இந்திய உதவியுடன் நடைபெற்றுவரும் மீள்குடியேற்றப்பணிகள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிடவென இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் இவ்வாரம் இலங்கை வருகைதரவுள்ளதாக இந்தியஉட்துறை அமைச்சர் பா.சிதம்பரம் நேற்று தமிழக முதல்வர் கருணா நிதியை சந்தித்துஆலோசனைநடத்தியபின்இத்தகவலை செய்தியாளர்களிடம் கூறினார்.

வெளியுறவுத்துறையினுடைய உயரதிகாரி இலங்கைக்கு இன்னும் சில நாட்களிலே செல்ல இருக்கிறார்.

அங்கே சென்று எத்தனை தமிழர்கள் அவர்களுடைய வாழ்விடங்களுக்கு திரும்பிச்செல்ல வேண்டும். அங்கு வீடுகட்டும் சட்டத்தில் எத்தனை வீடுகள் அடையாளம் செய்யப்பட்டிருக்கின்றன, எத்தனை பேருக்கு வீடுகள் தயாராக இருக்கின்றன. வீடு கட்டுவதற்கு எந்த நிறுவனங்களை இலங்கை அரசு அடையாளம் கண்டிருக்கிறது போன்ற விபரங்களை விசேடதூதுவர் தெரிந்துகொள்வார்.

பலாலி விமானத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் இவற்றை எல்லாம் இந்திய அரசு அபிவிருத்தி செய்யவுள்ளது.

அந்தத்திட்டங்கள் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதை நேரடியாக அவர் விசாரிப்பார்.

இலங்கை அரசுக்கும்தமக்கும்ஏற்பட்ட உடன்பாடு, அந்த உடன்பாட்டில் எந்த அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்தும் அந்த அதிகாரி ஆராயவுள்ளார் என சிதம்பரம் கூறினார்.

இதேவேளை தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைப்படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும்விடயம்குறித்து இலங்கைஅரசுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியதாக இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். (ச-3)


## கண்ணீர் அஞ்சலி

29.07.2010 அன்று 19, கண்டி வீதி பதுளையில்

சிவபதமடைந்த எமது உறவினர்

காசிநாதசுவாமி கிருஷ்ணராஜ சர்மா

அவர்களின் மரணம் குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

க.சாந்தரூப சர்மா
குருக்கட்டுப் பிள்ளையார் கோவில்
வல்லிபுரம்,துன்னாலை.

(2066)



## ஆனந்தி திருமண சேவை

### மணமகளை தேடுகின்றோம்

அமெரிக்கப் பிரஜையான 1983ல் பிறந்த சதயநட்சத்திரம், கிரகபாவ சங்கியை 4 1/2, உயரம் 5 அடி 06 அங்குலம், சூரியன் செவ்வாய் ஒரு ராசிக்குள் இருக்கும் கவர்ச்சிகரமானவருக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் பெண்மணியை விரும்புகின்றோம். தபால், நேரடியாக, தொலைபேசி 0212228708 மூலம் தொடர்புகொள்ளுங்கள். V.A. சிவராசா, சோதிடர்; 56, அம்மன் ரோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (2063)

# இன்று ஒரு தகவல்

## மனம் அடங்குமா?

ஒரு ராஜா பூன்ன வளர்த்தார். அந்தப்பூனையின் மீது மிகுந்த பிரியம் வைத்திருந்தார்.

இரவு நேரத்தில் அவர் என்ன செய்வார் என்றால்... அந்தப் பூனையின் தலையில் ஒரு விளக்கை வைத்துவிடுவார். அது ரொம்ப ஜாக்கிரதையாக, கீழே விழாமல் அந்த விளக்கைப் பார்த்துக் கொள்ளும். தலையை ஆட்டாமல் மிக நிதானமாக ராஜாவின் பின்னால் நடந்து போகும். ராஜா அந்த விளக்கு வெளிச்சத்தில் எல்லா வேலைகளையும் செய்துவிடுவார். கையில் ஒரு விளக்கை தனியாக எடுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியமில்லை.

மந்திரிகளை எல்லாம் கூப்பிட்டு அவர்களிடம், “பார்த்தீர்களா... இந்தப் பூனை எவ்வளவு விசுவாசமாக நடந்து கொள்கிறது. அதற்கு என்மீது எவ்வளவு மரியாதை பார்த்தீர்களா?” என்று சொல்லுவார். இதைக்கேட்டு அங்கிருந்த அமைச்சர்களில் ஒருத்தர் சொன்னார்.

“மன்னா, நீங்கள் செய்வது சரிதான், இருந்தாலும் அந்தப்பூனையின் விசுவாசத்தை நான் கொஞ்சம் சோதித்துப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்” என்றார்.

“சரி, உங்கள் ஆசையை ஏன் கெடுக்க வேண்டும்? நல்லா சோதித்துப்பாருங்கள்.” என்றார் ராஜா. உடனே அந்த அமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? எங்கேயோ புறப்பட்டுப்போனார். ஒரு ஐந்தாறு எலிகளைப்பிடித்துக் கொண்டு வந்தார்.

அரண்மனையில் ராஜா ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் அந்தப் பூனை மிகவும் பணிவாக நின்று கொண்டிருந்தது. அதனுடைய தலையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அமைச்சர் தான் பிடித்துக் கொண்டுவந்த எலிகளை அந்தப் பூனையின் பர்வையில் படும்படியாக எதிரில் விட்டார். அந்த எலிகள் எல்லாம் அங்கேயும் இங்கேயும் ஓட ஆரம்பித்தது.

அதைப் பார்த்தது அந்தப் பூனை அவ்வளவுதான் தலையில் இருக்கும் விளைக்கைப்பற்றியும் கவலைப்படவில்லை ராஜாவைப்பற்றியும் கவலைப்படவில்லை. ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து எலிகளைத்துரத்த ஆரம்பித்தது. தலையில் இருந்த விளக்கு எங்கேயோ போய்விழுந்தது. அணைந்து போய்விட்டது.

இருட்டில் ராஜா தடுமாற ஆரம்பித்தார்.

இந்த சமையத்தில் அந்த அமைச்சர் மறுபடியும் விளக்கை ஏற்றினார். வெளிச்சம் வந்தது.

அதற்குப் பின் அந்த அமைச்சர் பேசினார் “அரசே, பூனையின் விசுவாசத்தைப்பார்த்தீர்களா? எலி அதன் கண்ணில் படும் வரைக்கும் தான் விசுவாசமாக இருந்தது எலியைப் பார்ததும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அதைத்துரத்த ஆரம்பித்து விட்டது” என்றார்.

தான் அந்தப் பூனையைப்பற்றி நினைத்தது தவறென்பதை அதன் பின்னர் தான் ராஜா உணர்ந்து கொண்டாராம். சரி, இப்பொழுது எதற்கு இந்தக்கதை யெல்லாம் என்கிறீர்களா? இந்தப் பூனைமாதிரித்தான் நம்முடைய மனமும்.

மனதை எவ்வளவு பயிற்சி கொடுத்துப் பக்குவமாக வைத்திருந்தாலும் பார்ப்பதற்கு பரமசாது மாதிரித் தான் இருக்கும். பார்க்க வேண்டிய்தைப் பார்த்துவிட்டால் இந்தப் பூனைமாதிரிப் பாய்ந்து விடும்.

புலன் இன்பப் பொருட்கள் கிட்டாத வரைக்கும் மனம் அடங்கியிருப்பது போன்று தான் தெரியும். கொஞ்சம் வாய்ப்பு கிடைத்தாலும் அது குதித்துக் கூத்தாடும்.

பெரிய பெரிய முனிவர்களின் வாழ்க்கையில் நடந்த வீழ்ச்சி இதைத்தான் நிரூபிக்கிறது. புலன்களின் ஆற்றல் அதிகம் அதனால் மனக்கட்டுப்பாடு பயிற்சிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்கிறார் சுவாமி சிவானந்தர்.

மதுப்பழக்கத்தை விட்டுவிட்டேன் என்று உறுதியாக இருப்பான். மதுக்கடை கண்ணில் பட்டுவிட்டால் போதும் அவனைக் கேட்காமலே இழுத்துக் கொண்டு உள்ளே போய்விடும்.

இது தான் மனம் அதுதான் அந்த ராஜா வளர்த்த பூனை.

நம்ம ஆள் ஒருத்தன் தன்னுடைய தலையில் ஒரு விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தான். தலையை ஆட்டாமல் நிதானமாக நடந்து, ரொம்ப நேரமாக தேடிக்கொண்டிருந்தான்.

அந்தச்சமயத்தில் அங்கே வந்த ஒருத்தர், “என்னத்தைத் தேடுகிறீர்கள்?” என்று கேட்டான்.

“அது தான் மறந்து போய்விட்டது” என்று இழுத்தான் .

“சரி, கொஞ்சம் இப்படி உட்காருங்க. ஞாபகம் வந்ததும் தேட ஆரம்பிக்கலாம்” என்றார் அவர்.

இவன் கொஞ்சநேரம் உட்கார்ந்து யோசித்தான் .பின்னர் திடீரென்று எழுந்து, “ஞாபகம் வந்துவிட்டது ”என்றான்.

“என்ன?” என்று கேட்டார். எங்கள் வீட்டிலிருந்த விளக்கை “எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை . அதைத்தான் ஏற்றி வைக்கலாம் என்று தேடிக் கொண்டிருக்கின்றேன்”என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த.உயர்தரப்பரீட்சை 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை என்பன முறையே எதிர்வரும் 9 ஆம் திகதி மற்றும் 22 ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் செப்டம்பர் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை 55 ஆயிரம் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் உட்பட 2 இலட்சத்து 68 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

ஆயிரத்து 940 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சைகள் நடைபெறுவதுடன் தேசிய அடையாள அட்டையை பரீட்சார்த்திகள் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை புனர்வாழ்வு முகாமிலுள்ள 400 முன்னாள் போராளிகளும் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கு முகாமிலேயே பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 22 ஆம் திகதி 3 ஆயிரத்து 500 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இம்முறை 3இலட்சத்து 14 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ளவர்களுள் சுமார் 500 மாணவர்கள் இம்முறை இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளனஎன்றும்ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார். (6)

# மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு விவசாயக் காணிகள் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் விவசாய காணியை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக மூன்று தசாப்தங்களாக பயன் படுத்த முடியாதிருந்த அரசாங்க காணி களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி பிறி குப்தா ரோகணதீர குறிப்பிட்டுள் ளார்.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள 25 ஏக்கரை விட கூடுதலான பரப் பளவை கொண்ட காணிகளை அபிவிருத்தி பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள் ளது. (6)

# யுத்தத்தால் சேதமடைந்த தேவாலயம் புனரமைப்பு

(மிருசுவில்)

மிருசுவில் சென்நீக்லஸ் தேவாலயம் கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்து, திருத்த வேலைகள் எதுவும் நடைபெறாது காணப்பட்டது.

தற்போது இவ்வாலயத் திருத்த வேலைகளை இராணுவத்தினரின் உதவியுடன் பங்குத்தந்தை பத்தி நாதர் அடிகளார் மேற்கொண்டு வருகிறார். (2)

# இராசி பலன்

*02.08.2010*
*(ஆடி 17, திங்கட்கிழமை)*
*சப்தமி மாலை 6.34 மணிவரை*
*அச்சுவினி பின்னிரவு 1.18 மணிவரை*
*இராகுகாலம் 7.33 - 9.03 மணிவரை*
*சுபநேரம் 12.03 - 1.33 மணிவரை*
*நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி கொடியேற்றம்.*

**மேடம்** நண்பர்கள் கைகொடுத்து உதவுவார்கள், இறைவழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், குதூகலம் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரைவழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் உடனு க்குடன் நிறைவேறும், தனவரவுகள் தானாக வந்து சேரும், இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும் நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம், நல்ல தக வலைத் தரும் செய்தி ஒன்று வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள்.

**சிங்கம்** தொழிலில் போட்டியாக இருந்த வர்கள் விலகுவார்கள், தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பேச்சில் இனிமை காணப்படும்.

**கன்னி** கவலைகள் தீர இறைவனை வழிபடவேண்டிய நாள், உறவினர்களிடம் குறைகேட்கும் வாய்ப்பு உருவாகலாம், தேவையற்ற தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும்.

**துலாம்** தம்பதியினரிடையே அந்நியோன்யம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்** மனக்குழப்பம் அகலும், பயணிகளால் பலன் உண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படி நடக்கும்.

**தனுசு** சொத்துவாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வாய்ப்புக்கள் தேடி வரும் நாள், கெண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும், மனத்திற்கு இனிமையான செய்தி வந்து சேரும் நாள்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்பு கிட்டும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிட்டும், பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேகரிக்கும் நாள், உற்சாகம் அதிகரிக்கும்.

**மீனம்** ஆடை ஆபரண சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள் சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகி நிம்மதியை ஏற்படுத்தும், எதிர்பாராத தனலாபம் இல்லம் வந்து சேரும் நாள்.

வளவன்

# பேசும் படம்



ஆபத்தான பயணம்...

காட்சி-கிளிநொச்சி

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 130 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 120 | 120 | 140 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 50 | 70 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 60-70 | 140 | 130 |
| போஞ்சி | 90 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



மண்டைதீவு புனித பேதுருவானவர் திருச்சொரூப பவனி நேற்று மண்டைதீவு புறநகர்ப் பகுதியாக வலம் வந்தது. இதில் பேதுருவானவர் பக்தர்கள் புடைசூழ வலம் வருவதையும் திருச்சொரூபத்தையும் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தமிழரின் நீதியான கோரிக்கையை அங்கீகரிக்க தமிழ் அரசியல் சக்திகளிடம் ஒற்றுமை அவசியம்

## த.தே.வி. செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் விளக்கம்



தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைந்து கொள்ள முன்வருமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்புத் தொடர்பில், அந்தக் கட்சியின் பதில் எதிர்பார்க்கப்படும் நிலையில், அதன் கனிஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

அந்த அறிக்கையின் தொனியிலும் தோரணையிலும் பதிலளிபபது, தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் நோக்கத்திற்கும் முயற்சிகளுக்கும் பாதகமாக அமையக் கூடும் என்பதால், அந்த அறிக்கையில் எழுப்பப்பட்டிருக்கும் ஒரு சில விடயங்கள் தொடர்பில் மாத்திரம் சில தெளிவுகளை அளிக்க விரும்புகின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்பது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் செயற்படுவதாக கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

இந்த அரங்கம் ஓர் அரசியல் தளம் மாத்திரமே, இதற்கென தலைமைத்துவம் என்று எதுவும் கிடையாது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்பட, தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் பல்வேறு பாரிய பிரச்சினைகள் தொடர்பில், தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஓர் பொதுவான அரசியல் நிலைப்பாட்டை உருவாக்குவதே இந்த அரங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்தகையதோர் கூட்டுமுயற்சியை இலக்காக வைத்து சில தமிழ்க்கட்சிகளுடன் எமது கட்சி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்த வேளையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடமிருந்து அரசியல் சந்திப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பை, பல தமிழ்க் கட்சிகளைப் போன்று எமது கட்சியும் ஏற்றுக் கொண்டது. இந்த சந்திப்பின் விளைவே தமிழ்க் கட்சிகளின் அரங்கமாகும்.

இந்த அரங்கம் எந்த விதத்திலும் ஓர் அரசியல் கூட்டணியோ அல்லது தேர்தலுக்கான கூட்டோ அல்ல. எந்தக் கட்சி எங்கே நிற்கின்றது என்ற கேள்விக்கு அப்பால், எமது மக்களின் இன்றைய நிராதரவான நிலையில், நிம்மதியும், பாதுகாப்பும், கௌரவமும் கொண்ட வாழ்வினை அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கூட்டாக மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தொற்றுமையின் அடிபபடையிலேயே தமிழ்க் கட்சிகளின் அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்து, அரங்கத்தின் ஆரம்பக் கூட்டத்தில் கலந்து கொண்ட சகல கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் பூரணமான தோற்றம் பெறுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இணைந்து கொள்வது அவசியமானது என்பதை அரங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் உணர்ந்திருக்கின்றன.

எமது அழைப்புத் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்த கருத்து வரவேற்கத்தக்கது.

இந்தப் பின்னணியில், எமது அழைப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆக்கபூர்வமான பதில் எதிர்பார்க்கப்படுகின்றது. இந் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தேசியம், சுய நிர்ணய உரிமை என்பன தொடர்பாக தெளிவான ஒரு பார்வை கொண்டுள்ளது என்று தனது அறிக்கையில் தெரிவித்திருக்கும் தாயகக் கோட்பாட்டை ஏனோ மறந்து விட்டிருப்பது ஆச்சரியம் அளிக்கின்றது.

"தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைந்திருக்கும் அனைத்துக் கட்சிகளும் நேரடியாகவோ அல்லது நடைமுறையாகவோ அரசாங்கத்தின் ஆதரவுத் தளத்தில் நின்றே அரசியல் பேசுபவை" என்ற விநோதமான விமர்சனத்தையும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் முன் வைத்திருக்கிறார்.

எந்தத் தமிழ்க் கட்சி எங்கே நிற்கிறது என்பது அனைவருக்கும் வெளிப்படையாக தெரிந்த விடயம். வேற்றுமையிலும் சாத்தியமான ஒற்றுமை காண்பதே எமது இலக்கு. எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முயன்றால் சில கடுமையான அரசியல் விமர்சனங்களை நாமும் முன் வைக்க நேரிடும். இன்றைய நெருக்கடியான அரசியற் சூழ்நிலையில் அதனைத் தவிர்க்கவே விரும்புகிறோம்.

இன்றைய நிலையில், தமிழ்க் கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைக் களைந்து, எமது மக்களின் நீதியான கோரிக்கைகளை ஓரே குரலில் ஒலிக்கச் செய்வதே காலத்தின் கட்டாய தேவையாகும். தமிழ் மக்களின் பெயரில் அரசியல் நடாத்தும் எவரும் இதனை மறுத்துரைக்க முடியாது.

தமிழ் அரசியல்வாதிகள் பலர் நம்பி நிற்கும் இந்திய அரசாங்கத்தையும், அதனுடன் நெருங்கி உறவாடி வந்திருக்கும் இலங்கை அரசாங்கத்தையும் எமது மக்களின் நீதியான கோரிக்கைகளை அங்கீகரிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் வைப்பதற்கு, தமிழ் அரசியல் சக்திகள் மத்தியில் அடிப்படை ஒற்றுமை அத்தியாவசியமானது. இந்த ஒற்றுமையை தமிழ் மக்களும் எதிர்பார்க்கின் றார்கள். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தமிழர்களாகிய நாம் அழிந்து போகிறோம் இனியும் ஒற்றுமைப்படா விட்டால் என்ன கதி?

## ஒன்று சேருமாறு சம்பந்தருக்குச் சங்கரி பகிரங்க அழைப்பு

தமிழர்கள் அழிந்து கொண்டு போகின்றோம். இந்தத் தருணத்தில் ஒன்றிணைந்து ஒரே கருத்தை வலியுறுத்தும் போதுதான் மீண்டெழ முடியும். தமிழ் கட்சிகளின் அரங்கில் ஒன்றிணைவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை பகிரங்கமாக அழைக்கின்றேன்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று அழைப்பு விடுத்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பொது மக்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களாகிய நாம் காலாகாலமாக அழிந்து கொண்டு போகின்றோம். எங்கே நாங்கள் போகின்றோம். வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இராணுவத்தினரின் குடும்பங்கள் குடியமர்த்தப்படுகின்றன.

இதனால் எமது நிலங்கள் பறிபோகின்றது. இராணுவத்தினரின் குடும்பங்கள் வன்னியில் விவசாயம் செய்யப் போகின்றனர் என அரசு கூறுகின்றது.

அரசாங்கத்திற்கு எமது நிலங்களா கிடைத்தது சிங்கள மக்களுக்கு விவசாயம் செய்ய வழங்குவதற்கு.

எமது மக்களை மீள் குடியமர்த்துவதாகத் தெரிவித்து அரசாங்கம் உலக நாடுகளில் பிரசாரம் செய்கின்றது.

ஆனால் வன்னியில் பல குடும்பங்கள் இரண்டு மாதங்களுக்கு மேலாக சோறு உண்ணாமல் இருக்கின்றன. காரணம் அரசு நிவாரணத்திற்கு அரிசியை வழங்காமல் மாவைமட்டுமே வழங்குகின்றது.

எனவே அழிந்து கொண்டிருக்கும் எமது இனத்தை மீட்டெடுக்க நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுக் கொள்கையின் கீழ் செயற்படும்போதுதான் மீளமுடியும்.

இதனால் தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்தார். நாங்கள் சென்றோம். தமிழ் கட்சிகளின் அரங்கம் ஒன்றை ஆரம்பித்தோம்.

இந்த அரங்கம் அரசின் வால் பிடியாகச் செயற்படுமாயின் உடனடியாக நாங்கள் வெளியேறுவோம். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு நாங்கள் எழுத்து மூலமாக அழைப்பு விடுத்துள்ளோம்.

எம்முடன் இணைந்து ஆலோசனை கூறுங்கள். ஒரு பொதுக்கொள்கையின் கீழ் இணைவோம்.

தற்போது சுயநிர்ணயம், தேசியம் என்றெல்லாம் பலர் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள் என்ற உண்மையை மக்கள் உணரவேண்டும்.

எனவே எமது அழைப்புக்கு எல்லோரும் பதில் கூறக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதில் அளிக்க வேண்டுமென பகிரங்கமாக அறிவிக்கின்றேன்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்



# உலகை உலுக்கிய



அன்று 1989 ஓகஸ்ட் இரண்டாம் திகதி அன்றைய பொழுதும் வழமை யான எதிர்பார்ப்புகளுடன் தான் புலர்ந்தது. எமது இரட்சகர்கள் என்ற நம்பிக்கையுடன் எம் மண்ணில் தடம்பதித்த அமைதிப் படையினர்

ஈடுபட்டதில் நிராயுதபாணிகளான ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும். 12 பேர் காணாமற் போயும் 123 வீடுகளும் மீன்பிடி உபகரணங்களும் சைக்கிள்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள்

**அமைதிப்படை என்ற பெயரில் இங்கு வந்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் 1989 ஆம் ஆண்டு இதே ஆவணித்திங்கள் 2, 3,4 ஆம் திகதிகளில் 63 அப்பாவிப் பொதுமக்களைக் கோரமாகப் படுகொலை செய்து தமது அரக்கத்தனத்தை வெளிப்படுத்திய நிகழ்வின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.**

எமது உயிர்களைக் காவுகொள்ளும் யமதர்மர்களாக உலாவந்து கொண் டிருந்தனர். ஆம்! அன்றைய நிகழ்வு

எரிக்கப்பட்டும் உள்ளன. வல்வெட்டித் துறை பாலைவனமாகக் காட்சியளிக் கின்றது. சனத்தொகைகளில் அரை வாசிப் பேர் இடம்பெயர்ந்து அயற் கிராமங்களிற்குச் சென்றுவிட்டனர்" என்கிறது. வல்வை நகரைப் பொறுத்

றோரின் நிழற்படங்கள் எரியுண்ட வீடுகளில் இந்திய மண்ணின் இராணு வத்தால் அடித்து நொருங்கப்பட்டன.

இது நடைபெற்றும் 21 ஆண்டுகள் நிறைவுபெற்றுவிட்டன. இன்று வரை வல்வை மக்களைப் பொறுத்த வரை அழியாத வடுவாக நின்று நிலைத் திருக்கும் துன்பியற் சம்பவம் இது. ஆனால் இந்தப் பின்னணியில் நின்று கொண்டு சமகால அரசியற் புலத்தில் இந்தத் துயரச் சம்பவம் மறக்க முடி யாத ஒன்றாக அமைந்தபோதும் இந்தி யாவின் அண்மைக்காலப் போக்கு களையும் கருத்திற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமானதாகும். தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அண்மைக்கால இந்தி யாவின் உளப்பாங்கில் சில மாற் றங்கள்

நடந்தவற்றையெல்லாம் மறந்து துன்பத்துயரில் வாழும் இலங்கைத் தமிழருக்கு அதாவது வடகிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு சுதந்திரமாக வாழ



# வல்வைப் படுகொலைகள்!

பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பின்வரு மாறு கூறுகிறது.

"இந்திய அமைதிப் படையினர் தமது வீரர்கள் ஆறுபேர் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எதிர் நடவடிக்கைகளில்

தவரையில் இந்தப் படுகொலைகள் ஒரு வரலாற்றுப் பதிவு மட்டுமன்று யூலியன் வாலாபாக், மைலாய் படுகொலைகளிற்கு இணையானது. இப் படுகொலைகள் நடைபெற்ற நாள் முதல் மூன்று நாட்கள் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இந்தப் படுகாலைகள் தொடர்பான விபரங் கள் வெளியே தெரியாதவாறு மூடி மறைக்கப்பட்டன. அத்துடன் வைத்தியர் குழுவைக்கூட அங்கு செல்வதற்கு அனுமதிக்கவில்லை. இங்கு ஆழ்ந்து நோக்கவேண்டிய மேலுமொரு அம்சம் என்னவெனில் இந்திய சுதந்திரப் போரின் உத்தம தியாகிகள் எனப் போற்றப்பட்ட மகாத்மாகாந்தி , நேரு , சுபாஸ்சந்திரபோஸ் போன்

சாதகமாக ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

வல்வைப் படுகொலைச் சம்பவம் தொடர் யுத்தம் முடிந்து விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டும் சரணடைந் தும் உள்ள இச் சூழ்நிலையில் இந்தி யாவும் தமிழ்நாடும் தமிழ் மக்களுக்கு என்ன செய்யப்போகிறது என உல கமே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

எல்லாவற்றையும் இழந்து கையறு நிலையில் அரசியல் பலவீனத்துடன் இருக்கும் ஈழத்தமிழர் வாழ்வில் ஏதா வது உருப்படியாகச் செய்ய வேண்டு மெனில் அது இந்தியாவுக்கு சிறந்த சந்தர்ப்பமாக இப்போ அமைந்துள் ளது.

இம்மண்ணில் வழிசமைத்துக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் நாடு மாநில அரசிற்கும் மத்திய அரசிற்கும் நிறையவே உண்டு.

**ந.சிவரத்தினம்**
வல்வை ஆதிகோவிலடி ஜெயம்

சிங்கள மக்களுடன் போர் காரண மாக நிலவி வந்த அறியாமையினால் உண்டான கசப்புணர்வுகள் மாறி தமிழ் மக்கள் அவர்களுடன் சகோதரர்களாக வாழவும், தமது உரிமைகளைச் சுதந் திரமாகப் பயன்படுத்தவும் இந்திய அரசு தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றும் என இந்நாளில் நாம் நம்புவோமாக!

# ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப் படும் அனுமதிப்பத்திரம் இன்றி யாழ்ப்பா ணம் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரஜை ஒருவர் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அவர் நீதிமன்றத்தில் ஆயர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் குறித்த இந்திய பிரஜையை எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றின் மூலமாகவே குறித்த இந்தியப்பிரஜை யாழ்ப்பாணம் பயணம் மேற்கொண்டிருந்தார். வவுனியா பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# மீரிகமையில் பஸ் மீது அசிட் வீச்சு பெண்ணொருவர் பலி; சிறுமி காயம்

(கொழும்பு)

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் மீது அசிட் வீசப்பட்டதில் அந்தப்பெண் பலியாகியுள்ளதுடன் சிறுமி யொருவரும் காயமடைந்த சம்பவமொன்று மீரிகம பஹலகம பகுதியில் இடம்பெற்றுள் ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிறுமி அசிட் வீச்சுக்கு உள்ளாகிய நிலையில் உயிரிழந்த பெண்ணின் மகள் எனத் தெரிய வந்துள்ளது.

வரக்காப்பொலையிலிருந்து மீரிகம நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங் கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

குறித்த பஸ்ஸில் பயணித்துக் கொண்டி ருந்த மேற்படி பெண்ணை இலக்கு வைத்து அதே பஸ்ஸுக்கு பிரவேசித்த சந்தேக நபர் ஒருவர் இந்த அசிட் தாக்குதலை நடத்தியுள் ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரஷாந்த ஜயக் கொடி தெரிவித்தார்.

சம்பவத்தில் குறித்த பெண்ணுக்கு அருகி லிருந்த அவருடைய மகளும் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித் தார்.

அத்துடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டு வ்ருவதாகவும் அவர் மேலும் கூறினார். (6)

# புதிய அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஆதரவளிக்கப்படும் - இந்தியா தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஆதரவளிக்கப்படும் என இந்தியா அறிவித் துள்ளது. திட்டமிடப்பட்டுள்ள அரசியல மைப்பு திருத்தங்களுக்கு இந்திய மத்திய அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கப் பெறும் என சிரேஷ்ட அரசாங்க அமைச்சர் ஒருவர் ரிவிர பத்திரிகைக்கு செவ்வியளித்துள் ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமை யில் மாற்றம் ஏற்படுத்துவதற்கும் நாடாளு மன்றிற்கு பொறுப்புச் சொல்லக்கூடிய நிறை வேற்று பிரதமர் முறைமையை உருவாக்கு வதற்கும் இந்தியா ஆதரவளிக்கும் எனவும் அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் ஏற்கனவே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசியலமைப்பு திருத் தங்கள் தொடர்பிலான அனுபவங்களை பகிர்ந்துகொள்ளமுடியும் என இந்தியா அறி வித்துள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல மைப்பு திருத்தங்களின் மூலம் எவ்வாறான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும் என்பது குறித்து இந்தியா உன்னிப்பாக அவதா னித்து வருவதாக அவர்குறிப்பிட்டுள் ளார். (6)

# ஐ.தே.க.வின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நால்வர் கொண்ட உயர்மட்டக் குழு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினுள் தோன் றியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான்கு பேர் கொண்ட கட்சியின் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக ஐ.தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கியதேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கட்சியின் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திஸ்ஸ அத்தநாயக்க, காமினி ஜெயவிக்கிரம, ஜோசப் மைக்கல் பெரேரா, பிரதித் தலைவர் கருஜெய சூரிய ஆகியோர் தலைமையில் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் கூட்டம் நேற்று நடை பெற்றது.

இதேவேளை கட்சிக்குள் உள்ள பிரச்சி னைகள் அதன் அலுவலகமான சிறிகொத் தாவினுள் தீர்க்கப்படும் எனவும் அது வெளிக் கொண்டு வரப்படமாட்டாது என்றும் அதன் பிரதித் தலைவர் கருஜெயசூரிய இது தொடர் பில் கருத்து தெரிவித்துள்ளார். (6)

# வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

வடக்கு மாகாணத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாண வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி ஏ.எம்.றொமேஷ் (யா/முத்துத்தம்பி ம.வி.), திருமதி பி.கணேசலிங்கம் (யா/கோண்டாவில் பரஞ்சோதி, செல்வி கே.கே.குணநாதன் (யா/கொக்குவில் ஸ்ரேசன் சி.சி.ரி.எம்.எஸ்), கே.குகபரன் (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.), திருமதி கே.மங்களேஸ்வரன்(யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த ம.வி.) கே.இராஜலிங்கம்(யா/இந்து ஆரம்பப் பாடசாலை) செல்வி எம்.எ.மேரிறீட்டா (யா/ சென் ஜேம்ஸ் ம.வி.) செல்வி எம்.அம்பிகை (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), எம்.டொமினிக் ஜீவா(யா/சென் சாள்ஸ் ம.வி.),செல்வி எம்.யோகராணி (யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி.)

செல்வி.எம்.நளினி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி என்.செங்கை யாழியன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி என்.விமலேந்திரன் (யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க.பா.),திருமதி பி.தயா தேவினி (யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி), செல்வி ஆர்.பிரசாந்தனன் (யா/ பெரியபுலம் ம.வி.), திருமதி ஆ.சிவப்பிரகாசம் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), ஆர்.சிவபுத்திரன் (யா/முத்துத்தம்பி ம.வி.),செல்வி எஸ்.இளைய தம்பி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), எஸ்.இந்திரகுமார் (யா/ திருநெல்வேலி இ.த. க.பா.), செல்வி எஸ்.மகாலட்சுமி (யா/ இந்து மகளிர் கல்லூரி)

திருமதி எஸ்.நந்தகோபாலன் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி),எஸ்.ரவிச்சந்திரன் யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி), எஸ். சசிகரன் (யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தி.) செல்வி எஸ்.செல்வரஞ்சினி (யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி.), எஸ்.சிவானந்தன் (யா/கோண்டாவில் பரஞ்சோதி, எஸ்.சிவனொளிச் செல்வன் (யா/சென்மேரிஸ் றோ.க.த.க.பா.), எஸ்.சுதாகர் (யா/பாசையூர் சென்.அன்ரனிஸ் பெண்கள்), எஸ்.உமாச்சந்திரன் (யா/இளையதம்பி இந்து வித்தி.),ரி.ஜெயக்குமார் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி ரி.ராஜேஸ்வரன் (யா/ இந்து மகளிர் ஆ.பா.)

செல்வி ரி.சிவகலை (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பா.), ரி.சிவநாதன் (யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த ம.வி.), திருமதி ரி.தமிழ்ச்செல்வன் (யா/கொக்குவில் சி.சி.ரி.எம்.எஸ்.),வி.அன்பழகன் (யா/ இந்து ஆரம்பப் பா.), திருமதி வி.கிரிதகரன் (யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.),திருமதி வி.சக்திவேல் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை)

**யாழ்ப்பாண வலயத்திலிருந்து துணுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஏ.நிரஞ்சன் (யா/உயரப்புலம் மெ.மி.த.க.பா.), ஏ.றொபின்சன்(யா/சிறுப்பிட்டி ஜி.ரி.எம்.எஸ்.), எப்.அருள்செல்வன் (யா/ கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தி.), திருமதி ஜி.பாலமுரளீதரன் (யா/ முத்துத்தம்பி ம.வி.), திருமதி ஜி.உதயகுமார்( யா/ நல்லூர் வடக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி.), ஐ.ரமேசன் (யா/ ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி),திருமதி ஜே.எட்வின் (யா/ சென்.சாள்ஸ் ம.வி.)

ஜே.பிரபாகரன் (யா/முத்துத்தம்பி ம.வி.), கே.கௌரிஹாசன் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) கே.ரவீந்திரன் (யா/ புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி.), கே.சுரேஸ்குார் (யா/சிறுப்பிட்டி ஜி.ரி.எம்.எஸ்.),எல்.லோகநாதன் (யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), எம்.ரமணன் (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.), ஆர்.லிங்கராஜ் (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்,

ஆர்.நாகேஸ்வரன்(யா/அத்தியார் இந்துக் கல்லூரி), ஆர்.தேவகுமாரன் (யா/வைத்தீஸ்வரக் கல்லூரி), எஸ். டிகுகுமார் (யா/ ஊரெழு கணேச வித்தி.), திருமதி எஸ்.சோமேஸ் வரன் (யா/ கொக்குவில் மேற்கு சி.சி.ரி.எம்.எஸ்),ரி.ஸ்ரீ. சந்திரகுமார் (யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி. திருமதி வி.ஜெகதீஸ்வரன் (யா/பெரியபுலம் ம.வி.), கே.உமாகரன் (யா/கோப்பாய் தெற்கு கந்தவேல் த.ம.வி.),

**யாழ்ப்பாண வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு,**

எஸ்.கணேசலிங்கம் (யா/ வண்ணை நாவலர் வித்தி.)

**யாழ்ப்பாண வலயத்திலிருந்து மடு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஜி.கேனிற்மேனன் (யா/சென்றொக்ஸ் ம.வி.), எஸ்.முகுந்தன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தென்மராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஐ.தேவராஜன் (யா/எழுதுமட்டுவாள் கணேச), கே.இந்திரராஜா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி.) எம்.திவ்வியபாலன் (யா/வரணி ம.வி.), ஆர்.நந்தகுமார்( யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தி.), ஆர்.சுப்பிர மணியம் (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.), ஆர்.சுதன் (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி.), ஆர்.விக்னராஜா (யா/கைதடி விக்னேஸ்வரா வித்தி.),

எஸ்.அகிலன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.பிரபாகரன் (யா/ இயற்றாலை அ.மி.த.க.பா), எஸ்.சிவதாசன் (யா/மிருசுவில் றோ.க.த.க.பா.), எஸ்.தவராசா (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.),ரி.அகிலன் (யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா.), வி.உதயகுமார் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி.விஜயகுமார் (யா/கொடிகாமம் ஜி.ரி.எம்.எஸ்.)

**தென்மராட்சி வலயத்திலிருந்து துணுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி எம்.லோகதாஸ் (யா/வரணி ம.வி.) என்.கிருபாகரன் (யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தி.), பி.சந்திரமோகன்(யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.), பி.கிருபானந்தன் (யா/நாவற்குழி ம.வி.), பி.சிவசுதன் (யா/மீசாலை வீரசிங்கம் வித்தி.), எஸ்.திருச்செல்வம் (யா/வரணி ம.வி.)

**தென்மராட்சி வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு,**

கே. கமலநாதன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**வடமராட்சி வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி ஜே.கௌசிகன்(யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பா.), கே.நிமலன் (யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பா.), திருமதி எல்.அருளானந்தன் (யா/சிதம்பராக் கல்லூரி), திருமதி. எல்.அருந்தவசெல்வம்( யா/ உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), திருமதி எம்.அனுராகாந்தன் (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி)

என். பிரகாஸ் (யா/ இமையாணன் ஜி.ரி.எம்.எஸ்), திருமதி பி.யோகச்சந்திரன் ( யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ஆர்.சுதர்சன் (யா/சிதம்பராக் கல்லூரி), ஆர்.தனபாலசிங்கம் (யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பா), எஸ்.பொன்சிவனேசன் (யா/கரணவாய் தாமோதராவித்தி.), எஸ்.நாகேந்திரன் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), செல்வி எஸ்.சசிகலா ( யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செல்வி எஸ்.சுப்பிரமணியம் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி) ரி.சுபாகரன் (யா/புலோலி மெ.மி.த.க.பா.), திருமதி ரி.தயாபரன் ( யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), வி.திருக்குமரன் (யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பா).

**வடமராட்சி வலயத்திலிருந்து மடு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஏ.யோகேந்திரன் (யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தி), கே.பொன்னம்பலம் (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), எஸ்.முரளிதரன் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), எஸ்.விமலராசா (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), வை. விதுபாகரன் (யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

**வடமராட்சி வலயத்திலிருந்து துணுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

பி.வசீகரன்(யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), கே.நவனீதன்(யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), என்.நந்தன் (யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), ஆர்.யசோதரன்(யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), வி.அரவிந்தன் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), வி.ஜெகதீசன், (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**வலிகாமம் வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஏ.சுரேஸ்குமார் – (யா/புதுமடம் ஆர்.சி.ரி.எம்.எஸ்), ஈ.தயாகரன் ( யா/மகாஜனாக் கல்லூரி), கே.பாலமுருகன் (யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி.), கே.செல்வராஜா( யா/வயாவிளான்ம.வி.), செல்வி கே.சுந்தரலிங்கம் (யா/பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தி.), கே.யசோதரன் (யா/ அருணோதயாக் கல்லூரி), கனகரத்தினம் கசுபதிராஜா ( யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), எம்.உதயகுமார் (யா/இளவாலை மெய்கண்டான் வித்தி.), பி.மதனகோபாலன் (யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.), பி.சிவகுமார் (யா/ வயாவிளான் ம.வி.), ஆர்.பிறேமச்சந்திரன் (யா/கட்டுவன் புலம் ம.வி.)

எஸ்.ஜெயகாந்தன்(யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தி, எஸ்.சிவசிவா(ய/புன்னாலைக்கட்டுவன் ஜி.ரி.எம்.எஸ்), எஸ்.சிறீஸ் கந்தராஜா (யா/மகாஜனாக்கல்லூரி), திருமதி எஸ்.சிறீஸ்குமார் (யா/தொல்புரம் விக்னேஸ்வராக்கல்லூரி), திருமதி எஸ்.சிவகுமார் (யா/இணுவில் மத்திய கல்லூரி), செல்வி.ரிலோக நாயகி (யா/ விக்ரோறியாக் கல்லூரி), வி. உமாசுதன்(யா/மகாஜனாக் கல்லூரி), வி.விமலன் (யா/சைவப்பிரகாச வித்தி

**வலிகாமம் வலயத்திலிருந்து மடு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஈ.அனுசாந்தன் (யா/யூனியன் கல்லூரி), பி.மகாலிங்கம் (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), ஆர். ராஜபாலன் (யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.), எஸ்.கௌரீதரன் (யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி.), ரி. சசிதரன் (யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க.பா.), வி.முருகதாஸ் (யா/உடுவில் முருகமூர்த்தி வித்தி.

**வலிகாமம் வலயத்திலிருந்து துணுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

கே.ஆதித்தன் (யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கே.கணேசதேவா(யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.), மு.ஸ்ரீதங்கராஜா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பா.) எஸ்.சிவகுமார்(யா/கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.), செ.பாஸ்கரன் (யா/இணுவில் இந்துக் கல்லூரி), தி.கிரிதரன் (யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.), வை.சிவ கோணேசலிங்கம் (யா/வட்டு.மத்திய கல்லூரி)

**வவுனியா தெற்கு வலயத்திலிருந்து மடு வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி கே.கேசவன் (வவு/ம.ம.வி.), செல்வி.ஏ.பிரியதர்ஷினி (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.),செல்வி கே.றூபிகா ( வவு/இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.), செல்வி கே.செல்லத்தம்பி (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.), செல்வி பி.வி.ஜி.நாதன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.),செல்வி கே.கேமவதி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),செல்வி கே.நிறைமதி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி எல்.சிவகுருநாதன் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி),செல்வி.பி.வினோதா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), செல்வி ஆர்.ரஞ்ஜினிதேவி (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி)

செல்வி.எஸ்.காஞ்சனா(வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.) செல்வி எஸ்.புனிதமலர் வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.) செல்வி எஸ்.சூசைப்பிள்ளை (வவு/ மூன்றுமுறிப்பு ஜி.ரி.எம்.எஸ்), செல்வி ரி.அஜந்த கௌரி (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.) செல்வி ரி.செல்வராணி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), செல்வி ரி.விஜயலலிதா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.) கே.அருட்கரன் (வவு/வவுனியா தமிழ் ம.ம.வி.), ஆர். யோகநாதன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.) கே.சேயோன்(வவு/வவுனியா சி.சி.த.க. பா.), என் .கனகரட்ணம் (வவு/ பூந்தோட்டம் ம.வி.), ஆர்.கேமந்தன் (வவு/ பூந்தோட்டம் ம.வி.), எஸ். எரிக்கேந்தீசன் (வவு/வவுனியா சி.சி.த.க. பா.)

எஸ்.ஜெகன்(வவு/ பூந்தோட்டம் ம.வி.), திருமதி எஸ். ஜெயகுகன் (வவு/சித்திவிநாயகர் வித்தி.), எஸ்.பிரபாகர் (வவு/விபுலானந்தாக் கல்லூரி), எஸ்.சுரேஷ்குமார் (வவு/விபுலானந்தாக்கல்லூரி), வி.செல்லத்துரை (வவு/ விபுலானந்தாக் கல்லூரி),திருமதி பி.ஜே. கருணாகரன் (வவு/வவுனியா தமிழ் ம.ம.வி.), திருமதி பி.சரவணபவன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.), திருமதி சி. மரியசீலன் (வவு/இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.),திருமதி சி.தேசிகன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.) திருமதி கே. ஸ்ரீதரன் (வவு/இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.) , திருமதி கே.ரி.ரவீந்திரன் (வவு. இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.)

திருமதிஎல்.சண்முகரத்தினம் (வவு/அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தி.),திருமதி எம். காந்தவநேசன் (வவு/பிரமந்தனாறு வித்தி.), திருமதி எம்.ஆர்.அன்ரனி (வவு/முஸ்லிம் ம.வி),திருமதி என்.சபாநாதன் (வவு/ தமிழ்.ம.ம.வி.), திருமதி பி.ஞானசேகரம் (வவு/இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.), திருமதி ஆர்.சிவநாயகம் (வவு/பிரமந்தனாறு வித்தி), திருமதி எஸ். சுகானி (வவு/ முஸ்லிம் மகா வித்தி.), திருமதி எஸ்.திலீபன் (வவு/ அண்ணாநகர் பரமேஸ் வரா வித்தி.), திருமதி எஸ்.வீரசிங்கம் (வவு/ தமிழ் ம.வி.),திருமதி எஸ்.சுகந்தன் ( வவு/சி.சி.த.க.பா.), திருமதி ரி.கோபிநாத் (வவு/பிரமந்தனாறு வித்தி.), திருமதி ரி.சிவநேத்திரன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள்.ம.வி.), திருமதி வி.பாஸ்கரன் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.),திருமதி வி. வடிவேல்(வவு/தமிழ் ம.வி.)

திருமதி எ.ஜூட்ஜெயசீலன் (வவு/ நெளுக்குளம் கலைமகள் ம.வி.), திருமதி ஏ.நந்தகுமார் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி எ.ராசகுமாரன் (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி எ.சிவமனோகர் (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி எ.யோகலிங்கம் (வவு/சி.சி.த.க.பா.), திருமதி பி. சிவகுலசிங்கம் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி பி.தர்மகடாட்சம் (வவு/சி.சி.த.க.பா.), திருமதி சி.ரமேஸ் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி ஜி. நந்தகுமார்( வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி ஜி.ஸ்ரீகாந்தன் (வவு /வேல்குளம்கனிஷ்ட உ.பா.) திருமதி ஜி.துரைமணி (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி எச்.லைனத்குமார் (வவு/பூவரசங்குளம் ம.வி)

(15ஆம் பக்கம் பார்க்க...)

# பட்டதாரிகளிடம் நிறுவனங்கள் எதிர்பார்ப்பது என்னென்ன?



நிறுவனங்கள் பட்டதாரிகளைப் பணிக்குத் தேர்ந்தெடுப்பதில் தற்போது நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் நிறுவனங்கள் தங்கள் தேவைக்குத் தகுந்த திறன் படைத்த புத்திசாலியான இளைஞர்களைப் பணியிலெடுக்க ஆர்வம் செலுத்தின. ஆனால் தற்போது புத்திசாலித்தனத்துடன் உணர்வு மட்டத்திலும் தயார் நிலையில் உள்ள இளம் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் நிறுவனங்கள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன.

நிறுவனங்களின் இடையே இது குறித்து சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. பட்டதாரிகளிடம் இன்றைய நிறுவனங்கள் எதிர்பார்க்கும் முதல் முக்கிய ஐந்து அம்சங்களை இங்கே பார்க்கலாம்.

### தகவல் பரிமாற்றத் திறன்

தகவல் பரிமாற்றம் என்றாலே நன்றாகப் பேசுவது மட்டும்தான் என்ற தவறான கருத்து நம்மிடையே உள்ளது. ஆனால் நல்ல தகவல் பரிமாற்றம் என்பதில் நாம் நினைப்பதைப் பேசுவதோடு நம் எதிரில் இருப்பவர் சொல்வது மற்றும் எதிர்பார்ப்புக்கேற்ப பேசுவதும் அடங்கும் .

இதனால்தான் மிகச் சிறந்த சில பேச்சாளர்கள் கூட அரங்கிலிருப்பவரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் தகவல் பரிமாற்றத் திறன் குறைந்தவர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். எனவே பேசுவது, கவனித்து அதன்பின் அதற்கேற்ப பேசுவது என்ற இரு அம்சங்களும் தேவைப் படுகிறது.

### ஈடுபாடு

ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் இளம் தலைமுறையினர் அந்த நிறுவனத்தில் மிகுந்த ஈடுபாட்டோடு பணிபுரியும் போது அவர்களை அறியாமலேயே அவர்கள் நண்பர்களிடமும் மற்றவர்களிடமும் நிறுவனத்தைப் பற்றிய நல்ல தகவல்களை வெளியிடுகிறார்கள். இது நிறுவனத்திற்குப் பெரிதும் உதவிகரமாக உள்ளதாக நிறுவனங்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பணியில் சேர்பவரின் தனி நபர் ஈடுபாடு அவரின் முழுத் திறமையையும் வெளிப்படுத்தும் முக்கிய கருவியாகவும் உள்ளது. எனவேதான் தற்போதைய நிறுவனங் கள் இந்த அம்சத்தில் கவனம் செலுத்துகின் றன.

### தர்க்க ரீதியான சிந்தனை

இன்றைய பாடப் பகுதிகள் ஓரளவுக்கு இந்தத் திறனை வளர்க்கும் விதத்தில் உள்ளது. ஒரு பிரச்சினைக்குத் தீர்வு கண்டு பிடிக்கும் போதே அது மேலும் சில பிரச்சினைகள் உருவாகுவதை நாம் அறிவோம். பணிபுரியும் இடத்தில் பல்வேறு வயதுடைய மனிதர்களுடன் பணியாற்றுவது, அன்றாடம் பல்வேறு சூழல்களைச் சந்திப்பது போன்ற தேவைகள் இருப்பதால் தர்க்க ரீதியான சிந்தனை உடையவர்களை நிறுவனங்கள் நாடுகின்றன.

### சக மனிதர்களிடம் பழகும் தன்மை

ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் இந்தத் திறன் குறைவாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்டர்பெர்சனல் ஸ்கில்ஸ் எனப்படும் திறன் உள்ளவர்கள் தான் இலக்குகளை எளிதில் அடைவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதிலும் குறிப்பாக சேல்ஸ் மார்க்கெட்டிங், கன்சல்டிங், மனேஜ்மென்ட் போன்ற துறைகளில் இந்தத் திறன் படைத்தவர்களே பெரும் வெற்றியாளர்களாகத் திகழ்கிறார்கள். ஆனால் ஐ.டி.தொடர்புடைய துறைகளில் பணியாற்றும் பலருக்கும் இந்தத் திறனின் குறைபாடு காரணமாக எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடிவதில்லை. எனவே இந்தத் திறனையும் நிறவனங்கள் எதிர்பார்க்கின்றன.

### புதியதைக் கற்கும் திறன்

பட்டப் படிப்பைப் படிக்கும் காலத்திலேயே இந்தத் திறனை வளர்த்துக் கொள்வதே அறிவுறுத்தப்படுகிறது. ஏனென்றால் இந்தத் திறமையை குறுகிய காலத்தில் பழக்கத்திற்குக் கொண்டு வருவது சிரமமான காரியமாகும். படிப்பை முடித்துவிட்டுப் புதிய நிறுவனமொன்றில் இணையும் இளைஞர்கள் இந்தத் திறனுடையவர்களாயிருந்தால் மட்டுமே நிறுவனத்தின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற முடியும் என்பதால் இதுவும் முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# உலோகவியல் துறையில் அதிகரிக்கும் வேலைவாய்ப்புகள்

குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட கனிமங்களுக்கு உலோகம் என்று பெயர் . இவை மின் மற்றும் வெப்பத்தைக் கடத்தும் திறன்பெற்றவை. உலோகவியல் இன்ஜினியரிங் (Metallurgical Engineering) படிப்பானது உலோகங்களின் இயற்பியல் மற்றும் வேதியல் பண்புகள் உள் கூட்டுப்பொருட்கள் மற்றும் கலப்பு உலோகங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து படிப்பதாகும்.

இத்துறையை டெக்னோலஜி ஒப் மெட்டல்ஸ் என்றும் அழைப்பார்கள். உலோகங்களை தாதுக்களிலிருந்து பிரித்தெடுத்தல், பயன்படுத்தல், ஆராய்தலை இத்துறை உள்ளடக்கியது.உலோகவியல் துறையானது சில பிரிவுகளை உள்ளடக்கியது.

### தாதுக்களிலிருந்து பிரித்தெடுத்தல்

பூமியிலிருந்து எடுக்கப்பட்ட தூய்மையற்ற, கலப்படமான கனிமங்களின் மீது ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றின் தன்மைகளை ஆராய்தல் மற்றும் உலோகத் தாதுப்பொருட்களிலிருந்து உலோகங்களை தனியாகப் பிரித்தெடுக்கும் பயிற்சி போன்றவற்றை இப்பிரிவு உள்ளடக்கியது.

இயற்பியல் கோட்பாடுகள், வேதியியல் கோட்பாடுகள், எலக்ட்ரோலைட்டுகள் மூலமாக சுத்தமான உலோகங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

### கலப்புலோகங்கள்

அலுமினியம், குரோமியம், கொப்பர், இரும்பு, மக்னீசியம், நிக்கல் போன்ற சில கனிமங்கள் பொதுவாக கலப்பு உலோகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### உலோகங்கள் உற்பத்தி



உற்பத்தி இன்ஜினியரிங் உதவியுடன், நுகர்வோர் மற்றும் தொழிற்சாலை இன்ஜினியர்களுக்கு தேவைப்படும் கலப்பு உலோகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உருவம், அளவு, வெப்பத்தன்மை, திடத் தன்மை, துருப்பிடித்தல், சிதைவுறுதல் உள்ளிட்ட பல சோதனைகளுக்குப் பின் உலோகங்கள் உற்பத்தியாகும் .

ஒவ்வொரு உலோகவியல் இன்ஜினியரும் அடிப்படை இன்ஜினியரிங் மட்டுமல்லாமல் மேற்கூறிய பிரிவுகளின் அடிப் படைத் தத்துவங் களையும் பயில்கின்றனர். உலோகவியல் இன்ஜினியர்கள் எலக்ட்ரோன் மைக்ரோஸ்கோப், எக்ஸ்-ரே கருவிகள், நிறமாலையைப் புகைப்பட மெடுக்கும் 'ஸ்பெக்ட்ரோகிராப்' போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவில் உலோகவியல் கல்வியை அளிக்கும் கல்வி நிறுவனங்கள்:

1. ஐ. ஐ. டி. சென்னை (http://www.iitm.ac.in/)
2. என்.ஐ.டி. திருச்சி (http://www.nitt.edu/home/)
3. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை (http://www.annauniv.edu/index.phr)
4. பி.எஸ். ஜி தொழில்நுட்பக்கல்லூரி, கோவை (http://www.psgtech.edu/)
5. அரசு இன்ஜினியரிங் கல்லூரி, சேலம் (http://gcesalem,edu.in/inedex.htm)
6. ஐ.ஐ.டி.,மும்பை (http://www.iitb.ac.in/)
7. ஐ.ஐ.டி., கான்பூர் (www.iitk.ac.in)
8. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், வாரணாசி (www.bhu.ac.in/)
9. இந்தியன் இன்ஸ்டிடியுட் ஒப் சயின்ஸ், பெங்களூர் (www.iisc.ernet.in/)

### வேலை வாய்ப்புகள்

உலோகவியல் இன்ஜினியரிங் படிப்பை முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் மிகவும் பிரகாசமாக உள்ளன.

வருகிற 2020 ஆம் ஆண்டிற்குள் உலகம் முழுவதும் 20இலட்சத்திற்கும் மேற்பட்ட உலோகவியல் வல்லுனர்கள் தேவைப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.தவிர உலோகங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ளும் தனியார் தொழிற்சாலைகளிலும் பணிபுரியலாம்.

ஆரம்ப காலத்திலேயே ஆயிரம் டொலர்களை ஊதியமாகப் பெறலாம்.

போதிய அனுபவம் பெற்ற பின் 5 ஆயிரம் டொலர்கள் வரை ஊதியம் பெற வாய்ப்புள்ள அற்புதமான துறையாகும்.

# இலங்கை சிங்கள பௌத்தர்கள் போர் வெறி கொண்டுள்ளனர்



புத்தனின் போதனைகளைப் பின்பற்றி நடக்கும் நாட்டிலா இப்படி ஒரு யுத்தமும், கொடூரமான கொலைகளும் நடந்தது என்று இலங்கை குறித்து உலகம் கேட்கும் நிலையில், கொடூரக் கொலைகளுக்கு ஆதரவாக புத்த பிக்குகள் சிலர் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடததி வருகிறார்கள். இந்நிலையில், சுலக் சிவரக்சா என்ற புத்த சிந்தனையாளரிடம் இருந்து ஆறுதலான மனிதநேயக் குரல் உலகத் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கிறது!

தாய்லாந்தைச் சேர்ந்த இவர், தலாய்லாமா போன்றவர்களுடன் சேர்ந்து, "செயலாக்கமுள்ள பௌத்தர்களின் சர்வதேச இணையம்" என்ற அமைப்பை நிறுவியவர். இன மோதல்களுக்கு இடையிலான பிரச்சினைகளை அமைதி வழியில் தீர்க்கப் பாடுபட்டு வருபவர். உலகளவிலான புத்த பிக்குகள், சுலக்கின் நவீன பௌத்தக் கருத்துக்களுக்கு ஆதரவாளர்கள். இலங்கை இராணுவத்தின் போர்க் குற்றங்கள் குறித்து, தென் ஆபிரிக்காவின் டப்ளின் நகரில், கடந்த ஜனவரியில் "மக்கள் தீர்ப்பாயம்"விசாரணை நடத்தியது. அதன் நடுவர்களில் ஒருவராகவும் சுலக் செயற்பட்டார். அவரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் காந்தி அமைதி மைய இயக்குநர் பேராசிரியர் ராமு மணிவண்ணன், தாய்லாந்து சென்று சந்தித்துவிட்டு வந்திருக்கிறார். சுலக் கூறிய கருத்துக்களை அவரது வார்த்தைகளிலேயே ராமு மணிவண்ணன் நம்மிடம் சொன்னார். இதோ சுலக் பேசுகிறார்....

"உலக அளவில் செயற்பட்டுவரும் பல்வேறு சமாதான அமைப்பினரும், புலம்பெயர்ந்த தமிழர்களும் இலங்கையில் நடந்து வரும் கொடுமைகளுக்கு எதிரான சமாதான முயற்சிக்காக என்னை அணுகினார்கள். நான் ஒரு பௌத்தன். ஆனால், சிங்கள பௌத்தர்களோ போர் வெறிகொண்டவர்களாக

## இலங்கை அரசு செய்த தவறுக்கு பாவமன்னிப்பு கேட்க வேண்டும்

இருக்கின்றனர். தமிழர்களுக்கு எதிராகக் கடுமையாகப் பேசி வரும் பல பௌத்தத் துறவிகளை நானே பார்த்து, அவர்களைத் தியானத்தில் ஈடுபடுத்தி அமைதிப் படுத்த முயன்றேன். என் முயற்சி வெற்றி அடைய வில்லை.



தூண்டுதல் தொடர்ந்தது. இலங்கையில் படுகொலைகள் அதிகமாகவே நடந்தன.

இராணுவத்தின் மூலம் தமிழர் தரப்பைத் தோற்கடித்ததைத் தங்களின் மாபெரும் வெற்றி என்று சிங்களவர்கள் நினைப்பது என்னை அதிகமான துன்பத்தில் ஆழ்த்துகிறது. மக்களைக் கொல்வதற்கு மதத்தையும் இன அடையாளத்தையும் பயன்படுத்துவது என்பது சுமுகச் சூழலுக்கு ஏற்றதல்ல. ஒரு மனிதனுக்கு சகமனிதனைக் கொல்ல என்ன உரிமை இருக்கிறது? இதனால்தான், நான் டப்ளினில் நடந்த மக்கள் தீர்ப்பாயத்தில், "சிங்கள பௌத்தர்கள் இதை ஒரு வெற்றியாகக் கருதக் கூடாது" என்பதை என் தனிப்பட்ட கருத்தாகப் பதிவுசெய்தேன் அதில் நிறைய சாட்சிகள் வந்தார்கள். பாடசாலைகளில்,மருத்துவமனைகளில், இளைஞர்கள், ஏழை மக்கள் என்று பலரும் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றை நேரில் பார்த்த சாட்சிகள், குறுந்தகடுகள், பி.பி.சி - யின் ஒலிப்பேழைகள் மற்றும் இன்னும்

**ஜூனியர் விகடன்**

பல தரவுகளில் இருந்து பெறப்பட்ட சான்றுகள் பல என்னிடம் உள்ளன. டப்ளின் தீர்ப்பாயத் தீர்ப்புகளை நான்கு முடிவுகளாகத் தொகுக்கலாம். ஒன்று, இலங்கை அரசு போர்க் குற்றங்களைச் செய்துள்ளது. அடுத்து, இலங்கை அரசு மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்துள்ளது. அமைதிப் பேச்சுவார்த்தை முறிந்ததற்கு அனைத்துலக சமூகம், குறிப்பாக




இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகள் பொறுப்பேற்க வேண்டும். சாட்சிகளின் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டிய பணியும் சவாலாகத்தான் இருந்தது.

இலங்கை அரசு செய்த தவறுக்காக முதலில் பாவ மன்னிப்புக் கேட்க வேண்டும். அவர்கள் உண்மையை ஒப்புக்கொள்ள முன்வராத வரையில், நிஜமான புனரமைப்பு நடைபெறாது. கலிங்கப் போரில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த அசோகன், தன் மனதை மாற்றிக்கொண்டு தர்மத்தின் வழியை நாடினான். தமிழர்கள் பலரைக் கொன்று குவித்த ராஜபக்ஷ, அமைதியின் வடிவமாக மாறவேண்டும் என்றார் வேதனையாக.

புத்தனின் போதனைகளையே உதாசீனப்படுத்திய ராஜபக்ஷ, இந்த புத்த உபாசகர் வார்த்தையைக் காலம் கடந்தாவது ஏற்பாரா?

- இரா.தமிழ்க்கனல்

## ஐ.நா.செயலர் பான் கீ மூனின் நடவடிக்கை அரசியல் நோக்கத்திலேயே நிறைவடையும்

### இன்ன சிற்றி பிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தற்போது எந்தத் தீர்மானத்தை எடுத்து எதனை தெரிவித்தாலும் இறுதியாக அது அரசியல் நோக்கத்திலேயே சென்று நிறைவடையும் என இன்ன சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தொடர்ந்தும் தாமதம் காட்டிவரும் நிலையில் அவ்வூடகம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்தக்குழு, நியமிக்கப்பட்டதே தவிர பின்னர் எந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பது குறித்த தகவல் எவையும் இதுவரையில் வெளியாகவில்லை.

எது எவ்வாறாயினும் எல்லாப் பொது செயலாளர்களையும் போலவே பான் கீ மூனின் செயற்பாடுகளும் அரசியல் நோக்கத்திலேயே நிறைவடைந்து விடும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)

## இலங்கையின் மூன்று முக்கிய இடங்கள் உலக மரபுரிமைப் பட்டியலில் இணைப்பு

(கொழும்பு)

சிவனொளிபாதமலை, ஹோட்டன் சமவெளி, நக்கிள்ஸ் மலைத்தொடர் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டிய உலக மரபுரிமைப் பிரதேசங்களாக ஐ.நா.வின் யுனெஸ்கோ





அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பிரேஸிலில் நடைபெறும் யுனெஸ்கோவின் உலக மரபுரிமைக்குழுவின் 34 ஆவது மாநாட்டில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் மிகவும் அரிய வகையான இயற்கை விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இலங்கையின் ஏழு இடங்கள் உலக மரபுரிமைப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூலை 25ஆம்திகதி முதல் ஓகஸ்ட் 3ஆம் திகதி வரை பிரேஸிலின் பிரஸில்லியா நகரில் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதிய மைச்சர் பைஸர் முஸ்தபா தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# சட்டவிரோதமாக மதப் பிரசாரம் செய்யும் வானொலி நிலையங்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மதப் பிரசாரங்களை மேற்கொள்ளும் வானொலி நிலையங்கள் தொடர்பில் விசாரணை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ம்தப் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக சட்டவிரோதமான முறையில் சில வானொலி அலைவரிசைகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இஸ்லாமிய மதப் பிரசாரங்களை மேற்கொள்ளும் நோக்கில் இவ்வாறான வானொலி நிலையங்கள் இயங்கி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த வாரத்தில் பேருவளைப் பிரதேசத்தில் இவ்வாறான ஓர் வானொலி நிலையத்தை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

கடும் போக்குடைய இஸ்லாமிய மதப் பிரசாரங்களை குறித்த நபர்கள் மேற்கொண்டு வந்ததாகக் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் மதப் பிரசாரங்களை மேற்கொண்டு வரும் வானொலி நிலையங்களை முற்றுகையிடும் நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு பரிவர்த்தனை ஆணையகத்தின் பணிப்பாளர் அனுஷ் பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான சட்ட விரோத ஐந்து வானொலிச் சேவைகள் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய நிலா, கல்குடா எப்.எம்.போன்ற வானொலிச் சேவைகளும் சட்டவிரோதமான முறையில் இயங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகி றது.

இதில் அல்கொய்தா மற்றும் சஹாப் அடிப்படைவாத இஸ்லாமிய கருத்துக்கள் பிரசாரம் செய்யப்பட்டு வருவதுடன் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் நிதி உதவியும் அரசியல் தலைவர்களின் ஆதரவும் குறித்த சட்டவிரோத வானொலிச் சேவைகளுக்கு கிடைக்கப்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# உலகின் முக்கிய நாடுகளுக்கு தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை

## திவயின செய்தி

(கொழும்பு)

உலகின் முக்கிய நாடுகள் பலவற்றுக்கு தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனடா, ஜப்பான், தென்கொரியா, சீனா, ரஷ்யா, ஜேர்மனி உள்ளிட்ட பல முக்கிய நாடுகளில் இலங்கைக்கான தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பல்வேறு சர்ச்சை நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் உரிய முறையில் தூதுவர்களுக்கு நியமனம் வழங்கப்படாத காரணத்தினால் தூதரக உயரதிகாரிகளின் பணிகளை கனிஷ்ட மட்ட பணியாளர்கள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் கடந்த ஒரு வருட காலமாக எழுதுவினைஞர் சேவையில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவரே தூதுவரின் பணிகளையும் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

# தேசிய கண் வங்கியொன்றை நிறுவ அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

தேசிய கண்வங்கி ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கொழும்பு கண் வைத்தியசாலையின் கீழ் இந்தக் கண் வங்கி நிறுவப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில் நுட்பத்துடனான இந்தப் பிரிவின் ஊடாக மக்கள் அன்பளிப்புச் செய்யும் கண்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதுடன் அவற்றை நாடு முழுவதிலுமுள்ள கண் நோயாளர்களுக்கு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புதிய கண் வங்கிக்கான தொழில் நுட்ப உதவிகளை சிங்கப்பூரில் தேசிய கண் வங்கி வழங்குகிறது எனவும் எதிர்காலத்தில் விபத்துக்களில் உயிர் இழப்பவர்களின் கண்களை அவர்களது உறவினர்களின் விருப்பத்தின் பேரில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கொழும்பு கண் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சிசிரலியனகே தெரிவித்தார்.

இக் கண் வங்கியின் ஊடாக ஆசிய வலயத்தில் ஏனைய நாடுகளுக்கு கண்களை அன்பளிப்புசெய்வதற்குஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாகவும் டாக்டர் மேலும் தெரிவித்தார். (6)

# வெளிநாட்டினருக்கு விசா வழங்குவதில் மலேசிய அரசாங்கம் புதிய நடைமுறை

(கோலாலம்பூர்)

வெளிநாட்டினருக்கு விசா வழங்குவதில் மலேசியா புதிய நடைமுறையை அமுல் படுத்தியுள்ளது.

இதற்கமைய விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர், மலேசியாவை சேர்ந்தவரை கணவராகவோ அல்லது மனைவியாகவோ கொண்டவராக இருந்தால் அல்லது தொழில் துறை சார்ந்த நிபுணராகவோ இருந்தால் அல்லது 12 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்தவராகவோ இருந்தால் அவர்களுக்கு சிறப்பு விசா அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும் என்று அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ஹிஷாமுதீன் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் படி, வயது, கல்வித் தகுதி, மலேசியாவில் உள்ளவர் களுடன் உள்ள உறவு போன்ற பல்வேறு அம்சங்களை கருத்திற்கொண்டு மதிப்பு எண் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

65 புள்ளிகளுக்கு மேல் பெறும் விண்ணப்பதாரர்களுக்கு விசா வழங்க பரிசீலிக்கப்படும். எனினும் அனைத்து விண்ணப்பங்களையும் பொலிஸார் ஆய்வு செய்து பரிந்துரைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இப்புதிய திட்டம் கடந்த மாதம் 15 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

(6)

# 02.08.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1610 - ஹென்றி ஹட்சன் தனது கடற் பயணத்தின் போது இன்றைய ஹட்சன் குடாவை அடைந்தார்.
- 1790 - ஐக்கிய அமெரிக்காவில் முதற் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1798 - பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.
- 1870 - உலகின் முதலாவது சுரங்க தொடருந்து சேவை லண்டனில் தொடங்கப்பட்டது.
- 1903 - ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக மசிடோனியர்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது.
- 1914 - ஜேர்மனியப் படையினர் லக்சம்பேர்கை முற்றுகையிட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர் : லியனார்டோ டாவின்சி என்ற இத்தாலியப் போர்க்கப்பல் அவுஸ்திரேலியாவினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1918 - முதலாம் உலகப் போரை அடுத்து சைபீரியாவுக்கு தனது படைகளை அனுப்பப்போவதாக ஜப்பான் அறிவித்தது.
- 1931 -இராணுவ வேலைகளை நிராகரிக்குமாறு அறிவியலாளர்களுக்கு ஐன்ஸ்டைன் அழைப்பு விடுத்தார்.
- 1932 - பொசித்திரன் (இலத்திரனின் எதிர்த்துணிக்கை) கார்ல் அண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் அதிபரானார்.
- 1939 - அணு ஆயுதத்தை தயாரிக்க அறிவுறுத்துமாறு ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டிற்குக் கடிதம் எழுதினார்கள்.
- 1943 - போலந்தில் திரெபிலிங்கா வதை முகாமில் நாசிகளுக்கு எதிராகக் கிளர்ச்சிஇடம்பெற்றது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.
- 1968 - பிலிப்பைன்சில் கசிகுரான் என்ற இடத்தில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர்.
- 1973 - மான் தீவில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 51 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980 - இத்தாலியில் தொடருந்து நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- 1990 - ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது.
- 1994 - பலாலி இராணுவத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதில் உலங்கு வானூர்தி, கவச வண்டி தாக்கியழிக்கப்பட்டன.
- 2006 - திருகோணமலை மாவட்டத்தில் மகிந்தபுர, கிளிவெட்டி, பாலதோப்பு, பச்சனூர் இராணுவமுகாம்களைத் தாக்கி மூதூர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் உள்நுழைந்தனர்.

### பிறப்புகள்

- 1913 - தனிநாயகம் அடிகளார்,உலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைக்க அடிகோலியவர் (இ.1980)
- 1926 - ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர் (இ.2008)

### இறப்புகள்

- 1860 - சேர் ஹென்றி வோர்ட், இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநர் (பி.1796)
- 1892 - Dr.Bonjean, கொழும்பின் முதலாவது ஆயர்
- 1922 - அலெக்சாண்டர் கிரஹம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் (பி.1847)
- 1923 - வோரன் ஹார்டிங், ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது ஜனாதிபதி

**1989 - யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.**



# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010


ஆசிரியர்:-புன்னியாமீன்
மஸிதா புன்னியாமீன்
(கண்டி)


## மாதிரி பரீட்சை–14
## வினாத்தாள் –I

நேரம்- 45 நிமிடம்


✹ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
இல 1-30 வரையிலான வினாக்களில் 3 விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன.
மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.


✹ 1ஆம் 2 வினாக்களில் தரப்பட்டுள்ள உருவை அவதானித்து அதற்குப் பொருத்தமான சொல்லை, சொற்சோடியை தெரிவுசெய்க.

1. 
   1. நிறையுணவும், பழமும்
   2. பாலும், உணவும்
   3. உணவும், பானமும்

2. 
   1. சமய அடையாளம்
   2. சித்திரைப் புத்தாண்டு
   3. வெசாக்

✹ இல 3-4 வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து அதற்கு அடுத்து வரவேண்டிய உருவை தெரிவு செய்க

3. 


4. 

✹ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டு பிடித்து அதன் கீழ் கோடிடுக.

5. பாட்டி என்பவர் எப்பொழுதும் ஒரு
   1. பெண் ஆவார் 2. அம்மாவுக்கு மகளாவார் 3. கொண்டை போட்டிருப்பார்.

6. முயல் என்பது
   1. நீண்ட காதுகளையுடைய பிராணியாகும்.
   2. நீண்ட வாலையுடைய பிராணியாகும்.
   3. மிகவும் சாதுவான பிராணியாகும்.

7. புத்தகம் ஒன்றை வாசிக்கும் போது எமக்கு
   1.கண்கள் குளிர்ச்சியடையும்.
   2.மகிழ்ச்சி உண்டாகும்.
   3.அறிவு பெருகும்.

✹ 8ஆம், 9ஆம் வினாக்களில் சம்பவம் ஒன்றின் முதலாம் நிகழ்வும் கடைசி நிகழ்வும் தரப்பட்டுள்ளன. இடையிலுள்ள நிகழ்வுகள் மூன்றும் அமைய வேண்டிய சரியான ஒழுங்கிலமைந்துள்ள விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

8. நூலகத்துக்குச் சென்றான்............ ............... .............. புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினான்.
   1. புத்தகத்தைத் தெரிவு செய்தான்; கதிரையில் அமர்ந்தான்; புத்தகத்தைப் பிரித்தான்.
   2. புத்தகத்தைப் பிரித்தான், புத்தகத்தைத் தெரிவு, செய்தான் கதிரையில் அமர்ந்தான்.
   3. கதிரையில் அமர்ந்தான், புத்தகத்தைத் தெரிவு செய்தான்; புத்தகத்தைப் பிரித்தான்.

9. வாசலில் வாகனம் வந்து நின்றது ............... ............... ............... விருந்து பசாரம் நடைபெற்றது.
   1. வீட்டுக்குள் நுழைந்தார்கள்; வந்தவர்கள் இறங்கினார்கள்; கதவு திறக்கப்பட்டது.
   2. கதவு திறக்கப்பட்டது; வந்தவர்கள் இறங்கினார்கள்; வீட்டுக்குள் நுழைந்தார்கள்.
   3. வந்தவர்கள் இறங்கினார்கள்; வீட்டுக்குள் நுழைந்தார்கள்; கதவு திறக்கப்பட்டது.

10. பின்வரும் குறியீடுகளுக்கான விளக்கங்களை அவதானிக்க.

X -பெரிது Y -சிறிது M- சமன் N- இலும்


ABCDE எனும் பொருட்களின் நிறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A= 25 kg B-40kg C-10 kg D-40 kg E-45 kg

இதன்படி பொருட்கள் 5 இனதும் நிறைகள் தொடர்பாக முற்றிலும் சரியாக எழுதப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்ட கட்டம் எது?

| 1 | 2 | 3 |
|---|---|---|
| AXBN<br>EMB<br>AYCN | BXCN<br>AYEN<br>BMD | BXAN<br>EYBN<br>DMB |

11. உருவில் உள்ள கோலத்தை அவதானித்து வெற்றிடத்துக்கு வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




✹ பின்வரும் கணிதக் குறியீட்டுச் செய்கையை அவதானிக்க.

○+○+○+○=△+△

△+□=○+○+○+○+○+○

இதன் படி

12. □ இன் பெறுமானம் அல்லாதது.

1. ○+○+○ 2. ○+○+△ 3. ○+○+○+○

13. △ இன் பெறுமானமாக இருப்பது.


1. □+□ 2. ○+○ 3. □+○

✹ *ABCDE* எனத் தரப்பட்டுள்ள செயல்களை ஒழுங்குபடுத்தும் போது வரக் கூடிய சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

14. கிரிக்கற் விளையாட்டு ஒன்றின் சில சந்தர்ப்பங்கள்
   A.அதனை இருகைகளாலும் பந்து மறைப்பாளர் பிடித்துக் கொண்டார்.
   B. துடுப்பாட்ட வீரர் வேகமாகப் பந்தை மறிந்து அடித்தார்.
   C. துடுப்பாட்ட வீரர் ஆட்டத்தை இழந்தார்.
   D. பந்து வந்த திசையை முன்நோக்கி மறைப்பாளர் ஓடி வந்தார்.
   E. பந்து வீச்சாளர் பந்தைச் சுழற்றி வீசினார்.
   1. EBDAC 2. ECBAD 3. DACEB


15. சுகதேகி ஒருவரின் அன்றாடக் கருமங்கள் சில
   A. காலையிலே எழுந்திருத்தல்
   B. காலையாகாரத்தின் பின்னர் பழங்களைச் சாப்பிடுதல்
   C. சூடான தேநீர் பருகுதல்
   D. உடற்பயிற்சி செய்தல்
   E. குளித்துச் சுத்தமாகுதல்
   1. AEBDC 2. ADEBV 3.ACDEB

✹ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சரியான விடயத்தை தெரிவு செய்க.

16. 

இவ் உருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை


1. 4 ஆகும் 2. 5 ஆகும் 3. 6 ஆகும்

17. 


இவ் உருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னம் எது?

1. 2/6 2. 4/6 3. 6/8

18. நேரம் மு.ப. 9.30 ஐக் காட்டும் சரியான கடிகார முகப்பு எது?




19. கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் சுவர் ஒன்றில் செங்கற்கள் அமைந்துள்ள விதம் உருவில் உள்ளது. அதில் எத்தனை செங்கற்கள் உள்ளன?




1. 8 2. 16 3. 12

20. 10019 எனும் எண்ணுக்கு அடுத்து வரவேண்டிய எண் எது?
1. 10010 2. 10100 3. 10020

21. 1206 என்பதை ◁ □ △ ▽ என எழுத முடியுமாயின் 6002 என்பதை எவ்வாறு எழுதலாம்?

(1) △□□◁ (2) ▽△△□ (3) ◁△△□

22. உருக்களால் காட்டப்பட்டிருப்பது ஒரு இரகசியக் குறியீடாகும். இக் குறியீட்டுக்குப் பொருத்தமான சொல் எதுவாக இருக்கும்?



1. சந்திப்பு 2.துப்பாக்கி 3.சந்தோசம்


23.எதிர்காலத்தைச் சிறப்பாக்கிக் கொள்வதற்காக பெற்றோர் ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கும் ஆலோசனைகளை சுதாகர் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வான். பெற்றோரையும் ஆசிரியர்களையும் எந்நேரமும் மதிக்க கூடியனவாகவும் இவன் இருந்தான். சுதாகரைப் பற்றிக் கூறுவதனால் அவன் ஒரு.
1.நற்பண்புகளை உடையவனாவன்
2. நன்றியுடையவனாவான்
3.தைரியசாலி ஆவான்

24. வாகனங்கள் இரண்டு ஒன்றையொன்று நோக்கியவாறு நிறுத்தப்பட்டிருந்தன. அங்கே மனிதர்கள் சூழ்ந்திருந்தனர். பெண்ணொருத்தியின் முனங்கல் சத்தம் விட்டுவிட்டு கேட்டது. இங்கு நடை பெற்றிருக்கக்கூடிய சம்பவம்
1. ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டம் ஆகும்
2. ஒரு சவ ஊர்வலம் ஆகும்.
3.ஒரு வீதி விபத்து ஆகும்.

25. ஒரு பாடசாலையின் மாணவர்கள் பல் தமது வேலைத்திட்டம் ஒன்றுக்காக பாதையில் போவோர் வருவோருக்கெல்லாம் சுத்தமான குடிநீரை விநியோகித்தனர். மாணவர்களின் இச் செயல்
1. மிகக் கஷ்டமான வேலையாகும்.
2. மிக நன்மையான வேலையாகும்.
3. அவசியமே இல்லாத விடயமாகும்.


● பின்வரும் உருக்களில் தரப்பட்டுள்ள எண்களுக்கிடையிலான தொடர்பைப் புரிந்து கொண்டு வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

26.





(1) 18
(2) 3
(3) 9

27.




(1) 21
(2) 23
(3) 19


● இரண்டு மாணவர்கள் ஐந்தாம் தரத்தின் தவணைப்பரீட்சையொன்றில் ஐந்து பாடங்களில் பெற்ற புள்ளிகள் வரைபில் தரப்பட்டுள்ளது.




28.இரு மாணவர்களும் சமமான புள்ளிகள் பெற்ற இரு பாடங்களும் எவை?
1.தமிழும்,சமயமும்
2.கணிதமும்,சுற்றாடலும்
3.ஆங்கிலமும்,தமிழும்

29. சுதாகர் ஆங்கிலத்திலும், சமயத்திலும் எடுத்த புள்ளிகள் எவை?
1.80 உம் 90 உம்
2. 80 உம் 70 உம்
3. 70 உம் 60 உம்.

30. பின்வரும் நான்கு உருக்களிலும் தரப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்கள் எவ் விளையாட்டுக்களுக்கு உரியன என்பதைச் சரியாக ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.



1.உதைபந்து,ஹொக்கி, பூப்பந்து, கிரிக்கெற்
2.உதைபந்து,கிரிக்கெற், ஹொக்கி, பூப்பந்து
3.உதைபந்து, கிரிக்கெற்,பூப்பந்து,ஹொக்கி.

● பின்வரும் அறிவுறுத்தல்களை வாசித்து விடையாக வரவேண்டியது சொல்லைக் கண்டு பிடித்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


31. இது ஒரு நான்கெழுத்துச் சொல்லாகும். முதல் எழுத்தை நீக்கிவிட்டு வாசித்தால் சக்தி எனும் கருத்தைத் தரும். இரண்டாம் எழுத்தை நீக்கி விட்டு வாசித்தால் நீர் எனும் சொல்லுக்கு ஒத்த கருத்தாகும். அச்சொல் யாது?

32. பாத்திரம், தோத்திரம், சித்திரம், ஆத்திரம் எனும் சொற்களில் எதோ ஒரு காரணத்தினால் வித்தியாசப்படும் சொல் எது?

33.83438,76267,69696,82668 எனும் எண்களில் கோலம் வேறுபட்டிருக்கும் எண்ணை எழுதுக.

34.இலங்கை கனடா, ஒஸ்லோ, சீனா, யப்பான் -எனும் சொற்களில் ஒரு சொல் மட்டும் வேறுபடுகிறது. அச்சொல் எது?

● *ABCDE* எனும் நகரங்கள் அமைந்துள்ள வரைபடம் ஒன்று உருவில் உள்ளது அதனை நன்கு அவதானித்து இல 35-36 ஆம்வினாக்களுக் குரியவிடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




A யிலிருந்து B வரை
B யிலிருந்து D வரை
E யிலிருந்து D வரை
தூரங்கள் சமனாகும்.

35. மிக விரைவாகச் செல்லக்கூடியதாக இருப்பது A யிலிருந்து C யினூடாக Bயிற்காக அல்லது A யிலிருந்து D யினூடாக E இற்கா?

36. Aயிலிருந்து CB வழியாக D ஐ அடைந்து மீண்டும் நேரடியாக A ஐ அடைய வேண்டுமாயின் எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்.

● 37 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையினை புள்ளிக் கோட்டில் எழுதுக.


37. 36 பிள்ளைகள் கொண்ட வகுப்பொன்றிலே மூன்றில் இரண்டு பங்கினர் ஆண்பிள்ளைகளாவர் அவ்வகுப்பிலுள்ள பெண்பிள்ளைகள் எத்தனை?

38. சமமான இடைவெளிகளில் நடப்பட்ட 8 கொடிகம்பங்களுக்கு இடையிலான மொதத தூரம் 56 மீற்றராகும். அருகருகேயுள்ள இரண்டு கொடிக்கம் பங்களுக் கிடையிலான தூரம் எவ்வளவு?

39.முகம் பார்க்கும் கண்ணாடியினூடாகச் சுவர்க்கடிகாரத்தில் தென்படும் நேரம் 9.30 எனின் அக்கடிகாரம் காட்டும் உண்மையான நேரம் என்ன?

40.சூரியன் மறையும் திசையை முகம்பார்த்து நின்று கொண்டிருக்கும் சிறுவன் ஒருவனின் நீட்டிய வலது கை காட்டும் திசை எது?

# இலங்கையில் தோன்றிய தமிழ் அகராதிகள் 2



### ஆங்கிலம் - தமிழ் அகராதி

இதன் பூர்வாங்க வேலைகளை யாழ்ப்பாணத்திலிருந்த சி.எம்.எஸ் தொண்டர்கள் செய்தனரெனினும் இந்தப்பணியை முடிக்கும் பொறுப்பு அமெரிக்க மிஷனரிமாரிடமே ஒப்படைக்கப்பட்டது. உடுவிலிற் பணியாற்றிய மைரன் உவின்சிலோ என்ற அமெரிக்கர் 1844ஆம் ஆண்டு இதனை மானிப்பாயிலிருந்த அமெரிக்க மிஷன் அச்சகத்திற் பதிப்பித்தார்.

இதனை English - Tamil Dictionary என்று குறிப்பிட்டனர். இதனைத்தமிழில் ''தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற அகராதி'' என்று எழுதினர். இதனை லீவை ஸ்போல்டிங் இரண்டாவது தடவையாக 1852ஆம் ஆண்டு மானிப்பாயில் பதிப்பித்தார்.

1898ஆம் ஆண்டு சென்னையிலிருந்த ஹிக்கின்பூதம் நிறுவனத்தார் திரும்பவும் பதிப்பித்து விற்பனை செய்தனர். சென்னை AES என்ற பிரசுரம் 1980ஆம் ஆண்டுக்கும் 2003ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் இதனை பதினொரு முறை பிரசுரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### உவின்சிலோ அகராதி

தமிழ் - ஆங்கிலம் அகராதிகளில் இன்று வரை அறிஞர்களினாலும் மாணவர்களினாலும் விதந்து போற்றப்படுவது 1862 இல் மைரன் உவின்சிலோ பதிப்பித்த அகராதியாகும்.

1820ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு பணியாற்ற வந்த மைரன் உவின்சிலோ 1836 ஆம் ஆண்டு சென்னைக்குச் சென்றுவிட்டார். உவின்சிலோ அகராதி (A Comprehensive Dictionary of High and Low Tamil) சென்னையிலேயே பிரசுரிக்கப்பட்டது.

ஆனால் இதன் ஆரம்ப வேலைகள் யாழ்ப்பாணத்திலே நடைபெற்றன. இலங்கையிலே இவ் அகராதி ஆக்கத்திற்கு உதவி புரிந்ததாக ஜோசப் நைற், காபிரியேல் திசேரா, பீற்றர் பேர்சிவல் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார்.

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

### அகராதிச் சூழல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அகராதிக் கலை யாழ்ப்பாணத்தில் நன்கு பரவியிருந்தது. அமெரிக்க மிஷனரிமாரும் சுதேச தமிழ் அறிஞர்களும் இதனைப் பற்றி அதிகம் சிந்தித்தனர்.

1832ஆம் ஆண்டு ஈஸ்றமன் மைனர் என்னும் அச்சக வித்தகர் அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்தின் பொறுப்பையேற்ற பின்னர் தான் முக்கியமான அகராதிகள் பிரசுரிக்கப்பட்டன. இவருடைய மகன் வில்லியம் மைனர் அகராதிப் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் போல் தெரிகின்றது.

இவர் வளர்ந்தபின் அமெரிக்காவிற்குச் சென்று இறுதியில் இங்கிலாந்தில் குடியேறினார். அக்கால கட்டத்தில் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி உருவாகிக் கொண்டிருந்தது. (The Oxford English Dictionary) பலரும் ஆங்கிலச் சொற்களுக்கு வரைவிலக்கணமெழுதி அகராதித் தொகுப்பாளருக்கு துணைபுரிந்தனர். வில்லியம் மைனர் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆங்கிலச் சொற்களுக்கு வரைவிலக்கணம் எழுதியனுப்பினார்.

பிறநாட்டு சமயத் தொண்டர்களின் அகராதி ஆர்வம் வெகுவிரைவில் சுதேச தமிழறிஞர்களையும் பீடித்தது. இவர்களிலே சிலர் யாழ்ப்பாணத்திலே அகராதிகளைத் தொகுத்து யாழ்ப்பாணத்திலேயே அச்சேற்றினர்.

சிலர் யாழ்ப்பாணத்திலே பணியை ஆரம்பித்து தமிழகத்தில் தொகுத்து முடித்தனர். இன்னும் சிலர் தமிழகத்திலேயே அகராதி வேலையைத் தொடங்கி முடித்தனர். யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையிலான புகையிரதப்பாதை 1905ஆம் ஆண்டு தான் அமைக்கப்பட்டது. அதற்கு முன்னர் காடுகளினூடாக ஒரு மாதம் பயணஞ்செய்து கொழும்பையடைந்தனர். இதனால் யாழ்ப்பாணத்து மக்கள், திண்டுக்கல், மதுரை, நாகர்கோவில், சென்னை, திருவண்ணாமலை முதலிய தமிழ்நாட்டு நகரங்களிலே தான் தமது கல்வி கலாசார வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டனர்.

அகராதி தொகுத்த யாழ்ப்பாண அறிஞர்களில் குமாரசுவாமி முதலியார், வைமன் கதிரைவேற்பிள்ளை முக்கியமானவர். இவர் வட்டுக்கோட்டைச் செமினரி என்றழைக்கப்பட்ட அமெரிக்க மிஷனரிமாரின் பல்கலைக் கழகக் கல்லூரியில் கற்று அரங்கேறியவர். பிரிட்டிஷ் அரசில் நீதிபதியாகப் பணிபுரிந்தவர். தமது பதவியினின்றும் இளைப்பாறிய பின்னர் செந்தமிழ் அகராதி ஒன்றினைத் தொகுப்பதிலே தமது காலத்தைச் செலவிட்டார்.

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், நல்லூர் சரவணமுத்துப்பிள்ளை முதலியோர் இவருக்குத்துணை புரிந்தனர். இந்த அகராதியின் அகரவரிசை மட்டும் முடிந்திருந்த நிலையில் திரு.கதிரைவேற்பிள்ளை காலமானார். இதனை மதுரை நான்காம் சங்கத்துப் பண்டிதர்கள் சேர்ந்து 1910ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டனர். இது கதிரைவேற்பிள்ளை அகராதி என்றே முதலிற் குறிப்பிடப்பட்டது. இந்தப் பெயருடனேயே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1998ல் இதனை மறுபிரசுரஞ் செய்தது.

பேராயர்
**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**

சதாவதானம் நா.கதிரைவேற்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தில் தக்க ஆசிரியர்களிடமிருந்து தமிழிலக்கண இலக்கியங்களை கற்ற பின்பு 1893ஆம் ஆண்டு சென்னை சென்றார். இராஜப்பேட்டை வெஸ்லியன் உயர்தரப் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அப்பொழுதுதான் திரு.வி.க.அவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பேறு பெற்றார்.

(தொடரும்)

# ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்ட இழப்பு பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும்

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்ட இழப்பு பாரிய நெருக்கடிகளை தோற்றுவிக்கும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியுடன் ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் இடைநிறுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சலுகைத் திட்ட இழப்பினால் அநேகமான ஏற்றுமதியாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என்பதுடன் உள்நாட்டுச் சந்தையில் பொருட்களுக்கான விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியமும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சலுகைத் திட்ட இழப்பினால் பாதிப்புக்கள் இல்லை என அரசாங்கத் தரப்பினர் வலியுறுத்தி வருகின்ற போதிலும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மாறுபட்ட நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கிய மிக மோசமான கட்டுப்பாடு ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்ட இடைநிறுத்தமாகும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சலுகைத் திட்ட இழப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஈடுசெய்வதற்கு வேறு வழிமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# விரைவு கணிதகணித்தல் திறன் விருத்திப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான விரைவு கணிதக் கணித்தல் திறன் விருத்திப் போட்டியை பாடசாலை மட்டத்தில் நடத்தித் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அனுப்பிவைப்பதோடு மாணவர்கள் அனைவரும் பாடசாலை மட்டப் போட்டியில் பங்குபற்றினார்கள் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (2-19)

# 2500 ரூபா சம்பள உயர்வு குறித்து மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்படவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மஹிந்த சிந்தனையில் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு குறித்து வாக்குறுதி அளிக்கப்படவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதாக எந்த சந்தர்ப்பத்திலும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை எனவும் எனவே சம்பள உயர்வு குறித்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் எனவும் ஜனாதிபதி தொழிற்சங்கங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறெனினும் ஜனாதிபதியின் இந்த கருத்திற்கு சில தொழிற்சங்கங்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

பொறுப்பு வாய்ந்த தொழிற் சங்கங்களே நாட்டுக்கு அவசியம் எனவும் நாடு அடைந்துள்ள வெற்றிகளை திசை திருப்ப எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கமாட்டாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதுடன் சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பொதுத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வினை வழங்க வேண்டுமாயின் 36 பில்லியன் ரூபா தேவைப்படும் எனவும் அவர்தெரிவித்துள்ளார். (6)







இலங்கை நூலக சங்கத்தின் 50 ஆவது பொன்விழா நிகழ்வின் நிறைவாக நடைபெற்ற நூலக அபிவிருத்தி தொடர்பான பிராந்தியக் கருத்தரங்கு அண்மையில் யாழ்.பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நூலக ஆசிரியர்களையும் பிரதேச செயலக நூலகங்களின் ஆசிரியர்களையும் சிரேஷ்ட உதவி நூலக இணைப்பாளர் திருமதி கே.கல்பனா சந்திரசேகர், தேசிய நூலக உதவி சேவைகள் அமைப்பின் ஓய்வுபெற்ற நூலக உதவியாளர் திருமதி கே. கமலாம்பிகை ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கலைஞர் கருணாநிதி நினைத்திருந்தால் தமிழரின் அழிவைத் தடுத்திருக்கலாம்

## செம்மொழி மாநாட்டை மஹிந்த முடித்து வைத்திருக்கலாம்

"உலகத்தின் கண் பார்க்க... ஈழமே வீழ்ந்துவிட்டது. சுதந்திரத்துக்காகச் சொந்த மண்ணில் வாழ்ந்த தமிழினம் கருவறுக்கப்பட்டுவிட்டது. இனிப் போராடி எந்தப் பலனும் இல்லை என முடங்கிக் கிடந்த உணர்வாளர்களில் நானும் ஓர் ஆள்தான். சாப்பாடு இல்லை, தூக்கம் இல்லை, பத்திரிகைகளைப் படிக்கும் எண்ணம் கூட இல்லை. அந்த அளவுக்கு ஈழத்தின் வீழ்ச்சி என்னை


அசின்

வீழ்த்திப்போட்டது. ஆனால், நம்மை வீழ்த்திய சிங்களக் கொடூரத்துக்கு எதிராக இன்றைக்கு உலகத் தமிழினமே சங்கிலிபோல் கோத்துக்கொண்டு நிற்கிறது. ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளியாக கூண்டில் ஏற்றப்பட அத்தனை விதமான முன்னெடுப்புகளையும் தமிழ் இரத்தங்கள் செய்து கொண்டு இருக்கின்றன.

இந்த நேரத்தில் ஈழத்தின் வீழ்ச்சி குறித்து மனம் வெதும்பிக் கிடப்பது மூடத்தனம்.

அதனால்தான், அடிபட்ட புலியாய் மறுபடியும் ஆர்த்தெழத் தொடங்கி இருக்கிறது தமிழினம். 20க்கும் மேற்பட்ட நாடுகளில் நாடு கடந்த தமிழீழ அரசு அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்



றன. சட்டத்துக்கு உட்பட்டு தமிழர்கள் எடுக்கும் இத்தகைய ஆக்கபூர்வ முன்னெடுப்புகள் சிங்களத்தின் கழுத்தில் கயிறு வீசி இருக்கின்றன. இந்த நேரத்தில், ஒருசேர நாம் திரள்வதுதான் நம்மை சதிராடியவர்களுக்கு சம்மட்டி அடியாக இருக்கும். இதை தமிழகத் தமிழர்களும் தணியாத வேகத்தோடு கையில் எடுக்க வேண்டும்!" என, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளுக்கு 30 நாட்கள் பயணம் சென்று வந்திருக்கும் கவிஞர் தாமரைதான் இப்படி தகிக்கிறார். உலகத் தமிழர்களின் உணர்வுகள் குறித்து அவரிடம் பேசினோம்.

**கேள்வி:-"சிறப்புத் தூதர் அனுப்பச்சொல்லியும், மீள் குடியேற்றத்துக்கு உதவக்கோரியும் முதல்வர் கருணாநிதி எடுக்கும் முயற்சிகளை ஈழத் தமிழர்கள் எப்படிப் பார்க்கிறார்கள்?"**

"கருணாநிதியை வசைபாடுகிறார்கள். 'அவருக்கு நாங்க என்ன பாவம்பண்ணினோம்? அவர் நினைச்சிருந்தா, இந்த அழிவைத் தடுத்திருக்கலாமே! இத்தனை மக்கள் செத்தும் அவர் மனசில் இரக்கமே சுரக்கலையா?' எனத் தாய்மார்கள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினார்கள். ஜெயலலிதாவை ஒரு பொருட்டாகவே அவர்கள் கருதவில்லை. கடைசி நேரத்திலாவது எப்படியாவது தலையிட்டு கருணாநிதி போரை நிறுத்திவிடுவார் எனப் புலம்பெயர் தமிழர்கள் நம்பி இருந்தனர். ஆனால், வெறுமனே உண்ணாவிரதம், கடிதம் என கருணாநிதி நடத்திய நாடகங்கள் அவர்களைப் பொங்கவைத்துவிட்டது.

தமிழர்களுக்கு சம்பந்தமே இல்லாத பல உலக நாடுகள் ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கச் சொல்லி போராடி வரும் நிலையில், தமிழக சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் கூட இயற்றாமல், இன்னமும் கடிதம் எழுதுவதை உலகத் தமிழர்கள் நம்பத் தயாராக இல்லை. இதற்கிடையில், தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளைத் திருப்பி அனுப்பிய சம்பவம் உலகத் தமிழர்களைப் பெரிதாகக் கொந்தளிக்க வைத்திருக்கிறது. அவர்களின் அகராதியில் கருணாநிதி என்கிற பெயரைக்கூட இனி வைத்திருக்க மாட்டார்கள்!"

**கேள்வி:-"முதல்வர் நடத்திய செம்மொழி மாநாட்டுக்கு உலகளாவிய தமிழர்களிடம் என்ன எதிர்வினை?"**

"செம்மொழி மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாடு வாழ் தமிழர்களையும் நான் சந்தித்தேன். கவியரங் கம் என்ற பெயரில் நடந்த புகழாரா வைபோகங்களைச் சொல்லி, "இதுதான் செம்மொழிக்கான சிறப்பா?" என வேதனைப்பட்டனர். தனது கறையைத் துடைக்க கருணாநிதி எடுத்த முயற்சியாகவே செம்மொழி மாநாட்டைப் புலம்பெயர் தமிழர்கள் பார்த்தார்கள்.

அந்த மாநாட்டின மொத்த நிகழ்ச்சிகளையும் குற்றம் சொல்ல நான் விரும்பவில்லை. மாநாட்டில் எனக்குத் தெரிந்தது இரண்டே இரண்டு குறைகள் தான். தமிழனின் சாதனைச் சின்னங்களாக 40 ஊர்திகளை அணிவகுக்கச் செய்தார்கள். அதில் 41ஆவது ஊர்தியாக "இப்படி எல்லாம் வாழ்ந்த தமிழனை எப்படி எல்லாம் காட்டிக்கொடுத்தோம்" என்பதையும் அணிவகுக்கச் செய்திருந்தால், தமிழின வரலாறு முழுமை பெற்றிருக்கும். அடுத்து, மாநாட்டை முடித்துவைக்க ராஜபக்ஷவை அழைத்திருக்க வேண்டும். தமிழினத்தை முடித்து வைத்ததுபோல், தமிழ் மாநாட்டையும் அவர் முடித்து வைத்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். விட்டுத்தள்ளுங்கள் அந்த வீண் கச்சேரியை...!"

**கேள்வி:-"சீமானின் கைது ஏதேனும் கவனிப்பைப் பெற்றிருக்கிறதா?"**

"உலகளாவிய தமிழர்கள் சீமானைத் தீரம் மிகுந்த நாயகனாகப் பார்க்கிறார்கள். அவர் வெளியில் இருந்து தொடர்ந்து போராட வேண்டும் என எண்ணுகின்றார்கள். நான் சென்ற பல இடங்களிலும் அவருக்கு அபரிமிதமான ஆதரவு இருக்கிறது. அதே நேரம், திருமாவளவன் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிப்பதைத் துரோகத்தின் துணையாகப் பார்க்கிறார்கள். ஜெயலலிதாவோடு கூட்டணியில் இருந்தாலும்கூட வைகோவை அவர்கள் மிகுந்த மரியாதையோடு பார்க்கிறார்கள்!"

**"நடிகை அசின் தொடங்கி கருணாஸ் வரையிலான விவகாரங்களுக்காக புலம்பெயர் தமிழர்கள் உங்களிடம் குமுறியதாக இணையத்தளங்களில் செய்தி வந்திருக்கிறதே?"**


அம்சா

"ஈழத்தில் போர் நடந்தபோது இந்த அசின் எங்கே போனார்? இந்திப்பட ஷூட்டிங்குக்காக இலங்கைக்குப் போனதாகச் சொல்லும் அசின், அங்கே தமிழர்களுக்குக் கருணையோடு உதவியதாகவும் படங்கள் வெளியிட்டிருக்கிறார். ராஜபக்ஷவின் மனைவியோடு கை குலுக்கியபடி அவர் கருணைத் தாயாக மாறிய மர்மம்தான் தெரியவில்லை. ஷூட்டிங் என்கிற பெயரில் இலங்கைக்கு செல்வதாகச் சொல்லும் திரைப்படத் துறையினர் ஓர் உண்மையைத் தயவுகூர்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழப் படுகொலைகளுக்கு தக்க விளைவாக இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்பது தான் உலகத் தமிழர்களின் ஒருமித்த கோரிக்கை. இலங்கை அரசுக்கு பிரதான வருமானம் சுற்றுலா தான். ஷூட்டிங்குக்காகத் திரைத் துறையினர் அங்கேபோனால், அது இலங்கையின் பொருளாதாரத்துக்கு நாமே உதவுவது போன்றதாகிவிடும்.


சரத்குமார்

இந்த உலகில் ஷூட்டிங் நடத்த வேறு இடமே இல்லையா? அசின் இந்திப் படத்தில் நடிக்கும் தைரியத்தில் தன் தரப்பை நியாயப்படுத்துகிறார். ஆனால், அவர் தமிழ்ப் படத்தில் தலைகாட்ட முடியாத அளவுக்குத் தக்க பதிலடி கிடைக்கும்.

சிங்களத்துக்குத் துணைபோகும் அத்தனை நட்சத்திரங்களையும் அடியோடு புறக்கணிக்க உலகத் தமிழர்கள் தயாரா கிவிட்டார்கள்!"

**"கேள்வி:-கலைக்கு மொழி கிடையாது என்றும், நட்சத்திரங்கள் இலங்கைக்குச் செல்லும் விவகாரத்தில் அவரவர் எடுக்கும் தனிப்பட்ட முடிவுகளில் தலையிடுவது தவறு என்றும் அசினுக்கு ஆதரவாக நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் சொல்லி இருக்கிறாரே?"**

"கலைக்கு மொழி கிடையாது எனச் சொல்லும் சரத்குமாரை இந்தியில் போய் நடிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம். கலைக்கு மொழி இல்லை என எவரும் சொல்ல முடியாது. தமிழ்ப் படத்தை தமிழர்கள் தானே பார்க்கிறார்கள். அசினுக்கு ஆதரவாக சரத்குமார் சொன்ன கருத்தில் உலகத் தமிழர்கள் ஒருவருக்கும் உடன்பாடு இல்லை. அவர் தன்னல நோக்கில் செயற்படுவதாக அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.


தாமரை


(14வம் பக்கம் பார்க்க)

ஜூனியர் விகடன்












வடமாகாண கல்வியமைச்சின் விளையாட்டுத்துறை திணைக்களத்தினால் மாவட்டங்களின் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றுக்குகிடையிலான விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் வடமாகாண கல்வியமைச்சின் பிரதிச்செயலாளர் தி.பொன்னம்பலம், யாழ். அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வவுனியா அரச அதிபர் திருமதி சாள்ஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ். மாவட்ட அணியினர் அணிவகுத்து செல்வதையும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் அண்ணாத்துரை ஆகியோர் உரையாற்றுவதையும் வவுனியா இறம்பைக் குளம் அரசினர் மகாவித்தியாலய மாணவியரின் உடற் பயிற்சி நிகழ்வையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:என்.குமார்)

## இம்மாத முதலிரண்டு வாரங்களில் ஐ.நா.நிபுணர் குழுவின் அமர்வுகள்

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அமர்வுகள் இம்மாத முதலிரண்டு வாரங்களில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டுமேமாதம்பான் கீமூன் இலங்கைக்கு விஜயம் செய்த போது மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையின் அடிப்படையில் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளரின் பேச்சாளர் சொன்ஹா சோய் தெரிவித்துள்ளார். மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அமர்வுகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு திரட்டும் நோக்கில் இலங்கை அதிகாரிகளுடன் பல்வேறு வழிகளில் தொடர்புகள் பேணப்படும் எனவும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச ரீதியிலான நியமனங்களுக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்த அவர்,

நிபுணர்கள் குழுவின் விசாரணை அறிக்கையை இலங்கை அரசாங்கமும் எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார். (6)

## பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது -அமைச்சர் மேர்வின்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதி பெருந்தெருக்கள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடக் கூடாது என சுட்டிக் காட்டிய அவர்,

இவ்வாறு பௌத்த பிக்குகள் பாராளுமன்றிற்கு போட்டியிட்டுத் தெரிவாவதினால் அவர்களின் கௌரவத்திற்கு களங்கம் ஏற்படக் கூடுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விளையாட்டு வீரர்கள், திரை நட்சத்திரங்கள் அரசியலில் ஈடுபடுவதினை தாம் எதிர்க்கவில்லை எனவும் எந்த விதமான அரசியல் பின்னணி இல்லாதவர்கள் கூட அரசியலில் ஈடுபடுவதினை ஏற்றுக் கொள்ள முடியும் என்ற போதிலும் பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதினை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக பௌத்த பிக்குகளுக்கு சமூகத்தில் நன்மதிப்புக் காணப்பட்ட போதிலும், பாராளுமன்றத்தில் அதனை எதிர்பார்க்க முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## கலைஞர் கருணாநிதி....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அசின், கருணாஸ் உள்ளிட்டவர்கள் இலங்கைக்குச் செல்வதில் இவ்வளவு தீவிரமாக இருப்பது ஏன் என்கிற பின்னணியை உலகத் தமிழர்கள் நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள். தமிழ் நட்சத்திரங்களை இலங்கைக்கு அழைத்து பொருளாதார மேம்பாடு அடையத் துடிக்கும் சிங்கள சதிக்கு சரத்குமார் ஆளாகி விடக்கூடாது என்பது தான் என் பதற்றம்.

தமிழ் ஒருங்கிணைப்பைக் குலைக்கும் விதமாக கோடான கோடிகளைக் கொட்டி வரும் இலங்கைத் தூதர் அம்சா, தமிழ் நட்சத்திரங்கள் சிலரை லண்டனுக்கு வரவழைக்கப்போகிற விடயத்தையும் உலகத் தமிழர்கள் என்னிடம் பகிர்ந்துகொண்டார்கள். அவர்களின் பெயர்களை வெளியிட நான் விரும்பவில்லை.

ஆனால், நடிகர் சங்கத் தலைவராக இருக்கும் சரத்குமார் இந்த விவகாரத்தில் மிகுந்த எச்சரிக்கையோடும், இன உணர்வோடும் செயற்பட வேண்டும். காரணம், அவர் ஒரு நடிகர் மட்டுமல்ல... நடிகர் சங்கத் தலைவர்... ஒரு கட்சியின் தலைவர். அவர் மூலமாக தமிழ்த் திரையுலகையே இரண்டாக்க முடியும் என்பது சிங்கள அரசு போட்டு வைத்திருக்கும் திட்டங்களில் ஒன்று. அதற்கு சரத்குமார் ஒருபோதும் உடன்படக் கூடாது! கொல்லப்பட்ட மக்க ளின் பக்கமா... கொடூர ஆட்டம் போட்ட சிங்களத்தின் பக்கமா என்பதை தமிழ் நட்சத்திரங்கள் தெளிவுபடுத்த வேண்டிய நேரம் இது!"

கேள்வி :- "சு.ப.தமிழ்ச்செல்வனின் சகோதரர் தொடங்கி ஈழப் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்தபோது, பிரபாகரன் உள்ளிட்ட புலித் தலைவர்களின் நிலைமை குறித்து தெரியவந்ததா?"

"தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். மே - 17 வரை போர்க்களத்தில் இருந்து, எப்படியோ தப்பி வந்த சிலரும் இதனை மறுக்கவில்லை.

அதே நேரம், "தலைவர் வருவார், தமிழீழம் பெற்றுத் தருவார்" என்கிற முழக்கத்தைத் தவிர்த்து, "நாம் போராடித் தமிழீழம் பெறுவோம். அதனைத் தலைவர் கையில் தருவோம்!" என முழங்கும்படி நான் வேண்டினேன். உலகளாவிய அளவில் இப்போது உருவாகி இருக்கும் ஆக்க பூர்வமான கைகோப்பு கண்டிப்பாகத் தலைவர் கையில் தமிழீழத்தை ஒப்படைக்கும்!" நரம்புகளில் நம்பிக்கை தெறிக்கச் சொல்கிறார் தாமரை.

## ஆளும் கட்சி எம்.பி.க்களுக்கு விசேட கருத்தரங்கு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கட்சி பாரர்ளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட கருத்தரங்கொன்று நடத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிக ளில் பென்தொட்ட பிரதேசத்தில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாகவும் இக் கருத்தரங்கில் அரசாங்கத்தின் எதிர்காலத்திட் டங்கள் குறித்து ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 50க்கும் மேற்பட்ட புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவை நடவடிக்கைகள் மற்றும் ஆட்சி முறைமை குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த கருத்தரங்கு நடாத்தப்பட உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6)

# வன்னிப் பெருநிலப்பரப்புக்கு...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி.ஜே.லோகநாதன் (வவு/பூந்தோட்டம் ம.வி), திருழதி.ஐ.லக்சுமணன் (வவு/விபுலானந்தா கல்லூரி),திருமதி.ஜெ. ரமணி ( வவு/இந்துக்கல்லூரி), திருமதி.ஜெ. விஜய குமார்(வவு/ராஜேந்திர குளம் றோ.க.த.க), திருமதி.ஜெ.யோகராஜா (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி),திருமதி.கே. பூலோகசிங்கம் (வவு/இந்துக்கல்லூரி), திருமதி.கே. செல்லத்துரை ( வவு/நெளுக்குளம் கலைமகள் ம.விதிருமதி.கே. தெய்வேந்திரராஜா (மூன்று முறிப்பு றோ.க.த.பா.), திருமதி.எல். சிவ குமாரன் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி திருமதி.எம்.ஈ.அருள்நேசன் (வவு/இந்துக் கல்லூரி),திருமதி.எம்.ஜெயரஞ்சினி (வவு/சி.சி. தமிழ்க்கலவன் பா.), திருமதி.எம்.எம்.ராஜதுரை (வவு/விபுலானந்தா கல்லூரி)

திருமதி.எம்.நவரத்தினம் (வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி எம்.சத்திய தாசன் (வவு/ வவுனியா சி.சி.த.க.பா.), திருமதி.என்.அன்ரனிகுரூஸ் (வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி.),திருமதி.என். கோகுலராஜன்(வவு/இந்துக்கல்லூரி), திருமதி.என். குகானந்தன் (வவு/ பூந்தோட்டம் ம.வி.), திருமதி.என்.குமரகுலசிங்கம்(வவு/விபுலானந்தா கல்லூரி),திருமதி.என். ராஜரட்ணம் (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி. ஞானேஸ்வரன்(வவு/விபுலாணந்தா கல்லூரி), திருமதி.பி. ஜெகசோதிநாதன் (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி.ஜெயக்கொடி (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

திருமதி.பி.ஜெயரட்ணம்(வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி.கண்ணதாசன் (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி. கருணாகரன் (வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி.பி.இராமகிருஷ்ணன் (வவு/ விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி.செல்வரட்ணம் (வவு/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி.பி.ஶ்ரீரஞ்சன் (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), திருமதி.பி.தவராசா (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.பி. விக்னேஸ்வரன்(வவு/ நெளுக்குளம் கலைமகள் ம.வி), திருமதி.ஆர்.பாலசூரியன்(வவு/வவுனியா சி.சி.த.க.பா.), திருமதி.ஆர். ரவீந்திரன் (வவு/மூன்று முறிப்பு றோ.க.த.க.பா.)

திருமதி.ஆர்.தாஷினி (வவு/சி.சி.த.க.பா), திருமதி.ஆர். வசந்தி (வவு/ நெளுக்குளம் கலைமகள் ம.வி), திருமதி.எஸ்.அன்ரனி ஞானராஜ் (வவு/வவுனியா சி.சி.த.க.பா), திருமதி.எஸ்.ஜீவராஜன்(வவு/சிவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி.எஸ்.ஜெரால்ட் (வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), திருமதி.எஸ்.ஜேசுதாஷன்(வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.எஸ்.கிருஷ்ணன்(வவு/வவுனியா சி.சி.த.க.பா), திருமதி.எஸ்.லோகேஸ்வரன் (வவு/சமலகுளம் றோ.க.த.க.பா), திருமதி.எஸ்.மகேந்திரகுமார் (வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி), திருமதி.எஸ். மகேந்திரன் (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி. எஸ்.நந்தசேனா(வவு/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி),

திருமதி.எஸ்.நிமல் (வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி), திருமதி.எஸ். பஞ்சலிங்கம்(வவு/ பூந்தோட்டம் ம.வி), திருமதி எஸ்.பரந்தாமன்(வவு/விபுலாணந்தா கல்லூரி), திருமதி.எஸ்.பத்மகுமாரன்(வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி),திருமதி எஸ்.பொன்னுத்துரை (வவு/ விபுலானந்தா கல்லூரி), திருமதி.எஸ்.ராஜகுணசேகரம் (வவு/பூந் தோட்டம் ம.வி), திருமதி.எஸ்.சாந்தகுமார் (வவு/விபுலானந்தா கல்லூரி), திருமதி.எஸ். சிவபாலன்(வவு/வவுனியா இந்துக்கல்லூரி), திருமதி.எஸ்.சிவராஜா(வவு/வவுனியா சி.சி.த.க.பாடசாலை),

திருமதி.எஸ். வசந்தகுமார் (வவு/இறம்பைக் குளம் பெண்கள் ம.வி,)திருமதி எஸ்.வசந்தன்(வவு/விபுலானந் தா கல்லூரி), திருமதி எஸ்.விஜயகுமார் (வவு/பூந்தோட்டம் ம.வி),திருமதி ரி.கேதீஸ்வரன் (வவு.சி.சி.த.க.பா), திருமதி ரி.பொன்குமரன் (வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி), திருமதி ரி.வேலுப்பிள்ளை (வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி ரி.யோகேந்திரன் (வவு/இந்துக்கல்லூரி), திருமதி.வி.சந்திரன் (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி வி.ஜனகன் (வவு/விபுலானந்தாக் கல்லூரி), திருமதி வி.குலராஜா (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி வி. நவஜோதி(வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி), திருமதிவி. றேசிகுமார் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி.வி.தவக்குமார் (வவு.நெளுக் குளம் கலைமகள் ம.வி), திருமதி வி. தயானந்தராஜா (வவு.விபுலானந்தா கல்லூரி), திருமதி வை.கனகரட்ணம் (வவு/பூந்தோட்டம் ம.வி.), திருமதி வை.சண்முகநாதன் (வவு/ வேலுக் குளம் கனிஷ்ட உயர்தரப் பா.) ,திருமதி வை.சுந்தரலிங்கம் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி. வை.தவநேந்திரன் (வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

**வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து மன்னார் வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர் பெயர் விபரம்,**

பி.தயாபரன் (வவு. நெளுக்குளம் கலைமகள் வித்தி,

**வவுனியா தெற்று வலயத்தில் இருந்து துனுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

கே. ஜெயக்குமார் (வவு.அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி),கே. நிரஞ்சன் (வவு. இந்துக்கல்லூரி), என்.ரூபராஜ். (வவு. பிரமந்தனாறு வித்தி.

**வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

செல்வி.எஸ்.சந்திரசேகரம் (வவு/தமிழ் ம.ம.வி.), செல்வி.பி.ரேணுகா (வவு/நெளுக் குளம் கலைமகள் ம.வி),எஸ்.கோகுலதாஸன் (யா/இறம்பைக்குளம் பெண்கள் ம.ம.வி.), ஆர்.சச்சிதானந்தன்( பூவரசங்குளம் ம.வி.), திருமதி கே.இலங்கரத்தினம் (வவு/ இறம்பைக்குளம் பெண்கள் ம.வி.), திருமதி கே. சுரேசன்(வவு/முஸ்லிம் ம.வி),திருமதி எல். பாக்கியகுமரன் (வவு/பிரமந்தனாறு வி.), திருமதி ஜி.ரவீந்திரன்( வவு/சி.சி.த.க.பாட), திருமதி கே. சூசைதாசன்(வவு/இந்துக் கல்லூரி),திருமதி எஸ்.சந்திரகுமார் (வவு/இந்துக் கல்லூரி),திருமதி எஸ். பஞ்சாட்சரசர்மா (வவு/சி.சி.த.க.பாட),திருமதி ரி.தமிழழகன் (பூந்தோட்டம் ம.வி), திருமதி வி. ரவீந்திரநாதன் (வவு/சி.சி.த.க.பா.)

**மன்னார் கல்வி வலயத்தில் இருந்து மடு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

பி.ஈ.ஏ. லம்பேட் (மன்/நானாட்டான் ம.வி.), திருமதி சி.வி. எ.எஸ். குறூஸ்( மன்/சென் மேரீஸ் பெண்கள் கன்னியர் மடம்), எவ்.எஸ். ஐ.லம்பேர்ட் (மன்/சென்ஆன்ஸ் ம.ம.வி.), எல்.பியஸ் ஏணெஸ்ற் குறூஸ் (மன் /அல்மினா ம.வி),திருமதி எம்.சேவியர்(மன்/சாந்திபுரம் ஜி.ரி.எம்.எஸ்.),எம்.எ.ரவீந்திரன்(மன்/ பாத்திமா ம.ம.வி),திருமதி எஸ். அந்தோணி பிச்சை(மன்/சென் ஆன்ஸ் ம.ம.வி.), எஸ். செபமாலை (மன்/ மடுக்கரை ஜி.ரி.எம். எஸ்).

ரி.ஜே. குணசீலன் (மன்/நானாட்டான் ம.வி),எ.பி.ஆர். எம். பிகார்டோ (மன்/புனித வளநார் றோ.க.த.க.பாட), ஜெ.ஜி.லம்பேர்ட் (மன்/நெருவிலிக்குளம் ஜி.ரி.எம்.எஸ்.), ஜெ.எம்.செல்வானந்தன் (மன்/சென்லூசியாஸ் ம.வி),திருமதி முகமட் கிஷார் ஷ்றிபி (சென்/ சேவியர்ஸ் மகளிர் கல்லூரி), திருமதி பி. அருந்தவநாதன் (மன்/பாத்திமா (ம.ம.வி.), திருமதி எஸ்.எ.ஜெ.சகாயவதி (மன்/உயிலங் குளம் றோ.க.த.க.பா.),திருமதி எஸ். ஜீவ குமாரி (மன்/அல்மினா ம.வி),திருமதி உமா கிறிஸ்ரியன் (மன் /கொக்கு படயன் றோ.க.த.க.பா).

# மாணவர்களின் எதிர்காலக் கல்வி தொடர்பான கூட்டம்

(சாவகச்சேரி)

மாணவர்களது கல்வி கற்பித்தல் தொடர்பான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தென்மராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், கிராமசேவகர், சுவிஸ் நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் போது 10 வருடகாலமாக இப்பாடசாலை மூடப்பட்டிருந்தது. தற்போது இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததை தொடர்ந்து இப்பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே இப்பகுதி வாழ் மக்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொண்டு தமது பிள்ளைகளின் எதிர்கால கல்வி தொடர்பான கருத்துரைகளை வழங்குமாறு கேட்கப்படுகின்றார்கள். (2-29)

# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியை பாடசாலை மட்டத்தில் நடத்தி தெரிவு செய்யப்படும் மாணவர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அறியத்தருமாறு கேட்கப்படுகிறார்கள்.

வல்வெட்டித்துறை கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் தரம் 1,2 மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியை பாடசாலை மட்டத்தில் நடத்தி தெரிவு செய்யப்படும் மாணவர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 5ஆம்திகதி வியாழக்கிழமைக்கு முன் அறியத்தருமாறு கேட்கப்படுகிறார்கள்.

வல்வெட்டித்துறை கோட்டப்பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்றும் தரம் 1, 2மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி காலை 9 மணிக்கும், தரம் 3,4,5 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி செப்டெம்பர் மாதம் 5ஆம்திகதி காலை 9 மணிக்கும் யாழ்.வதிரி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்கும் 1,2 மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம்திகதி 9 மணிக்கும் தரம் 3,4,5 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம்திகதி காலை 9மணிக்கும் யாழ்.வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலையில் தரம் 1தொடக்கம் 5வரை கல்விபயிலும் மாணவர்களுக்கான திருக்குறள் மனனப்போட்டி காலை 9 மணிக்கு யாழ்.குடத்தனை அ.த.க. பாடசாலையில் நடைபெறும் என்று வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (2-19)

# கே.பிக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பது சந்தேகமே

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக்கொள்வனவாளராக செயற்பட்ட குமரன் பத்மநாதனிடம் உள்ள பெருந்தொகை சொத்துக்கள் காரணமாக அவருக்கு எதிராக அரசாங்கம் சட்டநடவடிக்கை மேற்கொள்ளுமா என்பது சந்தேகம் என ஜே.வி.பி. கூறியுள்ளது.

அதேவேளை கே.பி ஒரு தேசாபிமானி என வர்ணிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை எனவும் ஜே.வி.பி தெரிவத்துள்ளது.

கே.பியை பயங்கரவாதி என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல முன்னர் குற்றம் சுமத்தியிருந்த போதிலும் அரசாங்கம் அவருக்கு எதிராக குற்றப்பத்திரத்தையும் சமர்ப்பிக்கவில்லையென ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாநேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

'' தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் சேகரிப்பதிலும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் பிரதானமான நபர் கே.பி எனவும் அமைச்சர் ரம்புக்வெல முன்னர் தெரிவித்திருந்தார்.

தற்போது கே.பி. கைதுசெய்யப்பட்டு சரியாக ஒருவருடம் ஆகும் நிலையில் அதே அமைச்சர் கே.பி. தொடர்பான தனது நிலைப்பாட்டை மென்மையாக்கியுள்ளார்.

07.08.2009 இல் கே.பி கைது செய்யப்பட்டார். இத்திடீர் மாற்றத்திற்கு காரணமென்ன? ஒரு குற்றத்திற்காகக் கூட அவர்கள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை '' என ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

" கே.பி ஒரு தேசாபிமானி என இப்போது வ்ர்ணிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை. தற்போது நாட்டில் நீதி நியாயம் இல்லை. ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு என்ன நடந்தது? தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் எப்படி பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்க முடியும்? " என கேள்வியெழுப்பிய ரில்வின் சில்வா , இந்தப் பேட்டிகளின் படி கே.பி. வடக்கிற்கும் சென்றுவந்துள்ளார் என்றார். (6)

# விலைவாசி உயர்விற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கண்டிமாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர் எம்.எச்.ஏ.ஹலீம் தலைமையில் கட்டுகஸ்தோட்டை நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

விலைவாசி அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவற்றிற்கு எதிராக ஐ.தே.க.நாடளாவிய ரீதியில் நடத்தி வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் ஒரு அங்கமாகவே இது நடைபெற்றது.

இதில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டதுடன் ஆர்ப்பாட்டத்தின்போது சுலோகங்கள் ஏந்தியவர்கள் அரசின் செயற்பாடுகள் சிலவற்றை கண்டித்து கோஷமெழுப்பினர். (6)

## சீன சுரங்க விபத்தில் 15 பேர் பலி

சீனாவில் ஷான்ஷி மாநிலத்தில் லின் பென் நகரில் உள்ள ஒரு நிலக்கரி சுரங்கதத்தில் உள்ள தொழிலாளர்கள் தங்கும் இடத்தில் காஸ் சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் 15 பேர் பலியானார்கள். 20 பேர் காயம் அடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரிய்வில்லை. இது பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சீனாவில் சுரங்க விபத்துக்கள் அதிக அளவில் நடப்பது வழக்கம் ஆகும். இதில் ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகி வருகின்றனர்.


(6-2)

## பாகிஸ்தானில் தொடரும் மோசமான காலநிலை; உயிரிழந்தோர் எண்ணிக்கை 800 ஆக உயர்வு

பாகிஸ்தான் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 800 ஆக உயர்வடைந்துள்ளதெனத் தெரிவிக்கப் படுகிறது.

வடமேற்குப் பாகிஸ்தானில் நிலவி வரும் மோசமான காலநிலையினால் பலர் உயிரிழந்துள்ளதுடன் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனால் தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணிகளை தொடர்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



மேலும் கடும் மழை வெள்ளம் காரணமாக ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் அறுபது பேர் உரிழந்துள்ளதாகவும்ஜக்கிய நாடுகளின் மீட்புப் பணியாளர்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தானின் பல மாநிலங்களில் அவசர நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 36 மணித்தியாலங்களில் 312 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் 17 ஹெலிகொப்டர்கள் மீட்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## காஷா பகுதியில் தீவிரவாதிகள் மீது இஸ்ரேல் விமானம் ஏவுகணை வீச்சு

(காஷாசிட்டி)

பாலஸ்தீனத்தில் காஷா பகுதியை ஹமாஸ் தீவிரவாதிகள் ஆக்கிரமித்துள்ளனர். இவர்களுக்கும் பக்கத்து நாடான இஸ்ரேலுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வரு கிறது. இதற்கிடையே காஷா பகுதியில் இருந்த இஸ்ரேலின் கடற்கரை நகரமான ஆஷ் கெலன் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக தெரிகிறது.

இதற்கு பழிக்கு பழியாக இஸ்ரேலின் விமானப்படை காஷா பகுதியில் ஏவுகணை வீசியது.

இதில் ஹமாஸ் தீவிரவாதிகளின் சீனியர் கமாண்டர் இஷா பாட்ரன் (42) கொல்லப் பட்டார். இவர் ரொக்கெட் குண்டுகளை தயாரிப்பதில் வல்லவர். இவர் தவிர 11 பேர் படுகாயம் அடைந்தனர்.

காஷா பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த 5 இடங்களில் இஸ்ரேல் விமானப் படை ஏவுகணைகளை வீசியது. இதில் கட்டடங்கள் மற்றும் தீவிரவாதிகளின் பதுங்கு குழிகள் சேதம் அடைந்ததாகவும் தெரிவிக் கப்படுகிறது. (6)

## மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து இலங்கை -இந்தியா பேச்சுவார்த்தை




தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்க்கை படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் விடயம் குறித்து இலங்கை அரசுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியதாக இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் நேற்று தெரிவித்தார்.

இலங்கை தமிழ் மக்களின் துன்பங்களை தணிப்பதற்கு இந்திய அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ள நட வடிக்கைகள் குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதியுடன் கலந் துரையாடிய பின்னர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே சிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை இலங்கை அனுப்பி வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய உள்ளதாக கடந்த வாரம் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தமிழ் நாடு முதலமைச்சருக்கு அறிவித்துள்ளதாகவும் செய்தியாளர்களிடம் கூறினார். இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒழுங்கான தீர்வு ஒன்றை இந்திய பிரதமர் முன் வைக்க வேண்டும் என முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்திருந்தார்.

அடுத்து வரும் சில நாட்களில் இந்தியாவின் விசேட பிரதிநிதி இலங்கைக்கு சென்று இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் மீள் குடி யேற்றம் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் ப.சிதம்பரம் குறிப்பிட்டார். (6)

## இசை தெரபி மூலம் சிகிச்சை கோமாவிலிருந்து மீண்ட சிறுமி



கேரள மாநிலம் ஆலப்புழையை சேர்ந்த மீனவரான ராஜீ என்பவருடைய மகள் ராதிகா (வயது 6) ஆவார். இவர் கடந்த மே மாதம் ஒரு விபத்தில் கோமா நிலையை அடைந்தார். அவரை ஆலப்புழை மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் சேர்ந்தனர். ஒரு மாதத்துக்கு மேலாக சிகிச்சை அளித்தும் கோமா நிலையில் இருந்து மீளவில்லை.

எனவே அவருக்கு சிகிச்சை அளித்து வந்த டாக்டர் கிரிஜா இசை தெரபி என்னும் மாற்று சிகிச்சை அளிக்க முடிபு செய்தார். ராதிகா வுக்கு தினமும் பிடித்தமான பாடலை ஹெட் போன் மூலம் ஒலிக்க செய்தார். கர்நாடக இசையில் அமைந்த மெலோடி சினிமா பாடல்கள் ராதிகாவுக்கு மிகவும் பிடித்த கிரு ஷ்ணா என்ற பாடல் ஆகியவற்றை அடிக்கடி காதில் கேட்க செய்தார்.

இதற்கு நல்ல பலன் கிடைத்தது இப்போது ராதிகாவுக்கு நினைவு திரும்பி இருக்கிறது. உயிர் பிழைப்பாரா? என்ற கேள்விக் குறியில் இருந்த அவர் இப்போது நல்ல நிலையில் தேறி இருக்கிறார்.

இது குறித்து டாக்டர் கிரிஜா கூறியதாவது, ராதிகாவுக்கு பல்வேறு சிகிச்சை அளித்தும் பலன் கிடைக்கவில்லை எனவே மாற்று சிகிச்சை செய்ய முயற்சித்தேன் இதற்காக இன்டர்நெட்டில் தகவல்களை சேகரித்தேன்.

அப்போது கோமா நிலையில் இருப்பவர்களுக்கு இசை தெரபி சிகிச்சை அளித்தால் நரம்பு மண்டலங்கள் சீராகி நினைவு திரும்பும் என்று தகவல் இருந்தது. எனவே பிடித்த மான இசையை தொடர்ந்து கேட்க செய்தோம். இதில் மூளை நரம்பு சரியாகி கோமா நிலை நிவர்த்தி ஆகிவிட்டது. இவ்வாறு அவர் கூறினார். (6)




அணுசக்தி மூலப்பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கான ஒப்பந்தம் கடந்த வெள்ளிக் கிழமை வோஷிங்டனில் கையெழுத்தானது.இதில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் மீரா சங்கர், அமெரிக்க அரசியல் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## பெற்றோரை திட்டும் பிள்ளைகளுக்கு மூன்று மாத காலம் சிறைத்தண்டனை

(மும்பை)

பெற்றோரை திட்டும் பிள்ளைகளுக்கு 3 மாதம் சிறைத்தண்டனை அளிக்கும் அதிரடி சட்டத்தை மகாராஷ்டிர அரசு கொண்டு வந்துள்ளது. பெத்த மனசு பித்து பிள்ளை மனசு கல்லு... என்பது பழமொழி. பெற்றோரின் அன்பு, அரவணைப்பில் வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் அவர்களையே குப்பையாக தூக்கி எறியும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வயதான பெற்றோரை திட்டுவதும் வீட்டை விட்டு விரட்டுவது, சாப்பாடு போடாமல், மருத்துவச் செலவுக்கு பணம் தராமல் கொடுமைப்படுத்துவது பெரும்பாலான குடும்பங்களில் நடக்கின்றன. இதில் இருந்து பெற்றோரை காப்பாற்றும் சட்டங்களை மத்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் கொண்டு வந்துள்ளன.

இந்த வரிசையில் பெற்றோரை திரட்டும் பிள்ளைகளுக்கு 3 மாதம் சிறைத்தண்டனை அளிக்கும் அதிரடி சட்டத்தை மகாராஷ்டிர அரசு கொண்டு வந்துள்ளது. பெற்றோர் மற்றும் மூத்த பிரஜைகள் பராமரிப்பு சட்டம் 2010 என்ற அந்த சட்டத்தில், பெற்றோரை திட்டுவது மற்றும் அவர்களின் வாழ்க்கைச் செலவுக்கு பணம் தர மறுப்பது போன்ற குற்றங்களை செய்யும் பிள்ளைகளுக்கு 3 மாதம் சிறை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டையும் சேர்த்து அனுபவிக்க வழி காணப் பட்டுள்ளது.

மேலும் மூத்த குடி மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்ப்பு அளிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 35 தீர்ப்பாயங்கள் அமைக்கப்படுகிறது. இவை நீதிமன்றங்களைப் போலவே செயற்படும். இது தவிர, பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோரை பராமரிக்க மாவட்டத்துக்கு ஒரு முதியோர் இல்லமும் அமைக்கப்படுகிறதாக தெரிவிக் கப்படுகிறது. (6)

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
– பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐந்து ரூபாயுக்கு தர்ப்பை தரித்தவர்கள் தாங்களும் உபயகாரர்களாம்

தமிழினத்தின் அழிவுக்கெல்லாம் அடிப்படை எங்களிடம் இருக்கக் கூடிய ஒற்றுமையீனம் என்பது தெரிந்தவிடயம். இதற்கு அடுத்ததாக பொதுநலம் என்று கூறிக்கொண்டு சுயநலத்தின் அடிப்படையில் செயற்படும் கொடூரம்- இதன் விளைவாகவே தமிழினம் உய்வுபெற முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் மீதான போர், அந்தப் போரில் அவர்களுக்கு ஏற்பட்ட தோல்வி, இதில் பொது மக்கள் சந்தித்த இழப்புக்கள் என்ற பட்டியலை மனதிலிருத்திப் பாருங்கள்.

தமிழ்... தமிழ்... அதுவே எங்கள் மூச்சு என்று மேடையில் முழங்கிய பலர் எங்கே நிற்கிறார்கள் என்பதை உற்று நோக்குங்கள்.

இந்த அநீதித்தனம் இருக்கும் வரை எங்கள் இனம் உய்வுபெறவே முடியாது.

வெறுமனே சிங்களத்தரப்புகளை மட்டும் நாம் குறை கூறிக் கொள்வதால் விமோசனம் கிடைத்து விடாது.

முதலில் எங்களிடம் இருக்கக் கூடிய மிக மோசமான வக்கிரங்களை அடியோடு வெட்டிச் சரிக்க வேண்டும்.

அதன் பின்புதான் எங்களின் இனத்தின் விமோசனம் பற்றி சிந்திக்க முடியும். ஆனால் எங்கள் மக்கள் உண்மை அறிய முற்படவில்லை.

இதனால் 5 ரூபாய் அர்ச்சனைச் சீட்டுக்கு தர்ப்பை அணிந்தவர்களும் தங்களை திருவிழா உபயகாரர்களாகக் காட்டிக் கொள்கின்றனர்.

தாங்கள்தான் திருவிழா செய்ததாகக் கூறுவதில் அவர்களுக்கு எந்தத் தயக்கமும் இருக்காது.

இத்தகையவர்களை முதலில் இனங்காண வேண்டும்.

தமிழ் மக்கள் விழிப்படையாத வரை இத்தகையவர்களுக்குப் பாடம் புகட்டுவது கடினமே.

எனவே அன்புக்குரிய தமிழ் மக்களே! தமிழ் அரசியல் தலைமை என்பதிலேயே எங்களின் எதிர்கால வாழ்வு தங்கியுள்ளது.

எங்கள் அரசியல் தலைமைகள் ஏமாளிகளாக, கோமாளிகளாக, மற்றவர்களுக்கு சிரிபடு பொருளாக இருப்பார்களாயின் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்காமல் இருப்பது தான் சரியானது என்று சர்வதேச சமூகம் கருதிவிடும்.

அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கான ஆளுமைமிக்க, உலகம் மதிக்கக் கூடிய அரசியல் தலைமையை எங்ஙனம் ஏற்படுத்துவது என்ற கேள்வி ஏற்படுமாயின் அது தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையில் மட்டுமே சாத்தியமாகும் என்று அடித்துக் கூறுவோம்.

தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் தமிழ்ப் புத்திஜீவிகள் அடங்கிய ஆலோசனைக் குழுவும் இணைந்து செயற்படும்போது எங்கள் அரசியல் தலைமையும் பலம் பெறும்.

அட! எங்கட பாவவினை ஒற்றுமை என்றால் ஒவ்வாமையல்லோ! என்ன செய்வது!

# நீதிமன்ற உத்தரவுக்கு அடி பணியாவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை

## ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவுகளுக்கு அடிபணியா விட்டால் அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என ஜனநாயக தேசி யக்கூட்மைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கூட்டங் களில் பங்கேற்பதற்கு ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தீர்ப்புக்களுக்கு அரசாங்கம் அடிபணிந்து செயற்படுமென தமது கட்சி எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்களில் பங்கேற்கும் விவகாரம் தொடர்பில் மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தொடர்ச்சியாக நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு அனுமதி அளிக்கப்படாவிட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கநேரிடும் என ஜனநாயக தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்குமாறு நீதவான் எழுத்து மூலமாக உத்தரவு பிறப்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற சிறப்புரிமை உறுதி செய்யப்பட்ட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ச)

# அனைத்துப் பாடசாலைகளிலும் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

## கனகரத்தினம் ம.ம.வியில் ஆளுநர் ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைப் பணிகள் இன்று அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்படும்.

இன்று காலை 9 மணிக்கு யாழ்/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் உட்பட உயரதிகாரிகள் கலந்து கொள்வர் எனத் தெரிவித்த யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்,

பாடசாலைகள், சுகாதார உத்தியோகத்தர்களின் ஆலோசனை மற்றும் உதவிகளைப் பெற்று டெங்கு ஒழிப்புநடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமெனவும் உள்ளூராட்சி சபைகளுடன் தொடர்புகொண்டு குப்பை கூழங்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்த வலயக்கல்விப் பணிப்பாளர்,

டெங்குஒழிப்புத்தொடர்பில்பொதுசுகாதாரப்பரிசோதகரின் சான்றிதழ்களை யாழ். வலயக் கல்விப் பாடசாலைகள் தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ந)

# 9-வது நாளாக மனித நேயப்பயணம் அதிகளவில் இணையும் மக்கள்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்காக நீதிகேட்டு நேற்று ஒன் பதாவது நாளாக சிவந்தன் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையை நோக்கி தனது மனிதநேய நடைப்பயணத்தை தொடர்ந்துவருகிறார்.

இவரது பயணத்துடன் அதிகளவிலான மக்கள் தொடர்ச்சியாக இணைந்து வருகின்றனர். நேற்றுக்காலை முதல் 10 இற்கும் மேற்பட்டவர்கள் சிவந்தனுடன் இணைந்து நடந்து செல்கின்றனர்.

நேற்று முன்தினம் 12 மணித்தியாலங்கள் நடந்த சிவந்தன் 42 கிலோ மீற்றர்களை கடந் திருந்தார். பிரித்தானியாவில் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றரும் பிரான்சில் 64 மணித்தியாலங்களில் 228 கிலோமீற்றரையும் அவர் இதுவரை நடந்து கடந்திருக்கிறார்.

பரிஸ் நகரை அடைவதற்கு 68 கிலோமீற்றர்கள் நடக்க வேண்டி இருப்பதுடன் இன்று அவர் பரிஸை சென்றடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரிஸ் மக்கள் எழுச்சி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் சிவந்தன் அங்கிருந்து ஜெனீவா நோக்கி மேலும் 600 கிலோமீற்றர்கள் நடந்து செல்ல இருக்கின்றார்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மீது சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும், கொல்லப்பட்ட அப்பாவி மக்களிற்கு நீதி கிடைக்கவேண்டும், தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும், மனித உரிமைகள் மதிக்கப்படும்வரை இலங்கையை புறக்கணிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஜெனீவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நீதிகேட்டு சிவந்தன் இந்த நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். (ச-5)

# ஹன்டர்-ஹயஸ் விபத்து ஐந்து பேர் படுகாயம்!

(கைதடி)

ஹன்டரும் ஹயஸ் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் ளானதில் 5 பேர் படுகாயம் அடைந்தனர். இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

யாழ். நகரிலிருந்து கொழும்புக்கு சென்று கொண்டிருந்த ஹன்டரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த ஹயஸ் வானுமே விபத்துக்குள்ளானது. இதில் கொழும்பிலிருந்து சுற்றுலாவுக்கென ஹயஸில் வந்த நால்வரும், ஹன்டரின் சாரதியும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த ஐவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ச-3)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## தியானம்



வெற்றியை நாடும் மனிதர்கள் தியானம் செய்வது மிக அவசியம். மூன்று விடயங்களில் கவனம் இருந்தால் மட்டுமே ஒருவருக்குத் தியானம் எளிதில் கைகூடும். தியானத்திற்கு அடிப்படை -உடலிலும் உள்ளத்திலும் தூய்மையாக இருத்தல் வேண்டும். மனத்தூய்மையின் அவசியத்தை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அத்துடன் அதற்கு பொறுமையும் அவசியம். தியானப் பயிற்சியின் தொடக்கத்தில் மனதில் ஆச்சரியமான காட்சிகள் எல்லாம் தோன்றும். நாளடைவில் அவை மறைந்து விடும். மனம் நம்மைச் சோதிக்கும். பொறுமையோடு இருந்தால் வெற்றி நிச்சயம். எனவே. விடாமுயற்சியும் தியானத்திற்கு தேவை.

தியானத்தின் முடிவில் பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருளே உன் மகிமையைத் தியானிக்கிறேன். என் உள்ளத்தை ஒளிரச் செய்வாயாக என்று பிரார்த்திக்க வேண்டும். உடல் நன்றாக இருந்தாலும் நோயுற்று அவதிப்பட்டாலும் தியானப்பயிற்சியை ஒரு நாளும் தவறவிடக்கூடாது.காலை மாலை நேரங்களில் உடலும் மனமும் அமைதியாக இருக்கும் என்பதால் இவ்வேளைகளில் தியானப்பயிற்சி எளிதில் கைகூடும்.



சாவகச்சேரி பு்வேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விழாவின் போது மாணவர்களது பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நிறுவுனர் மகாலிங்கம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் நிலைய நிர்வாக சபைத் தலைவர் வை.இராசரத்தினம் நிற்பதனையும் மாணவர்களிற்கு பாண்ட் வாத்தியத்தை பயிற்றுவித்த ஆசிரியைக்கு நிறுவுநரின் துணைவியார் திருமதி சரஸ்வதி மகாலிங்கம் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி நிருபர்)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு பிரதேச அபிவிருத்தி சார்ந்த அரச , அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை கேட்டுள்ளது. (2-246)

## புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திருநெல்வேலி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக இராசநாயகம் ரஞ்சன் தெரிவாகியுள்ளதுடன் இக் கூட்டுறவுச் சங்கத்தின் உப-தலைவராக வை.உதயராசா தெரிவாகியுள்ளார்.

யாழ்க்கோ பாற்சாலையானது தற்போது இவ்விடத்தில் இயங்கி வருவதற்கு இவர் தலைவராகுவதற்கு முன்பே ஆக்கபூர்வமான உதவிகளை செய்தவர் என்று யாழ்க்கோ பாற்சாலையின் முகாமையாளர் வை. உதயராசா தெரிவித்துள்ளார். (2)

## சிறுவர் அரங்க நிகழ்வுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான சிறுவர் அரங்க நிகழ்வில் பங்கு பற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களையும், நாடகத்தின் தலைப்பினையும் நாடகப்பிரதி ஒன்றினையும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட மட்ட நிகழ்வுகள் யாவும் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதுடன் வலயமட்ட நிகழ்வுகள் அனைத்தும் செப்ரம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாவற்றையும் வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி க. பஞ்சலிங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2-19)

## விளையாட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.சண்முகசங்கரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா.வித்தியாலய அதிபர். பொ.சிவானந்தராஜா சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி, காரைநகர் பிரதேசசபை செயலாளர் இ.லோகநாதன், காரைநகர் வடக்கு கிராம சேவையாளர் ஐ.நடேசன், சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி சோ.அருளாம்பிகை, சமுர்த்தி உத்தியோகத்தர் த.பாரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (246)

## சட்டவிரோத மின்பாவனையால் அடிக்கடி மின் துண்டிப்பு

## மக்கள் விசனம்

(பொற்பதி)

பொற்பதி, குடத்தனை ஆகிய கிராமங்களில் சட்டவிரோதமான முறையில் பெறப்படும் மின்சாரத்தினால் அடிக்கடி இப்பகுதி இருளில் மூழ்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட சில வீடுகளுக்கே இலங்கை மின்சார சபையினர் மின்சாரத்தை வழங்கியுள்ளனர். மின்சாரம் வழங்கப்பட்ட பகுதிகளில் இருந்து பொதுமக்கள் தமது பாவனைக்காக சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெறுகின்றனர். இதனால் இப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது.

எனவே, இப்பகுதியில் வாழும் மின் பாவனையாளர்கள் பெரிதும்பாதிக்கப்படுவதுடன் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தமது பாடங்களைக் கற்பதற்கு பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு, நிவர்த்தி செய்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-2)

## புதியகிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் யாழ். கிளை இன்று காலை 9.45 மணிக்கு இலக்கம் 74,கன்னாதிட்டி வீதியில் தலைவர் திருமதி சிறோமால்குறே தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இவ் லிமிட்டெட்டின் சபை உறுப்பினரும் பணிப்பாளருமான இரான் குரே, யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன், இவ்லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குனர் எல். ஏ. ஜெ.எஸ்.ம.பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது வரையறுக்கப்பட்ட லிமிட்டெட்டின் நோக்கங்கள், அதன் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை தலைவர் மக்களுக்கு அறிவுறுத்தவுள்ளார். (2)

## இனந்தெரியாத விஷமிகள் இரவு வேளையில் அட்டகாசம்

(பொலிகண்டி)

பொலிகண்டியிலுள்ள கொற்றாவத்தைப் பகுதியில் இனந்தெரியாத விஷமிகள் குழுவொன்று இரவு வேளைகளில் அப் பகுதியில் அட்டகாசம் செய்து வருகின்றனர்.கடந்த 29 ஆம்திகதி அதிகாலை ஒரு மணியளவில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு கற்களால் வீசித் தாக்கியதுடன்; இவ்விஷமிகள் கொற்றாவத்தை ஓம் சரவணபவ தொலைத் தொடர்பு நிலையத்தின் முன் தொங்கவிடப்பட்டிருந்த பெயர்ப்பலகையை உடைத்து சேதப்படுத்தியும் உள்ளனர்.

இப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து குறித்த விஷமிகளைக் கலைத்துச் சென்ற போது, இவர்கள் தப்பியோடி விட்டனர்.

தற்போது கொற்றாவத்தைப் பகுதியில் இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் வல்வெட்டித்துறைப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம்,பொதுமக்களின் நிம்மதியைக் குழப்பும் வகையில் கூக்குரல் இட்டு ரகளை செய்த மற்றுமொரு கும்பலை இச் சந்தியில் வைத்துப் பிடித்தனர்.

இவர்களைப் பொலிஸார் வீதியில் நிறுத்தி வைத்திருந்ததுடன் பின்னர்கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (6-2)




## பாடசாலை தொகை மதிப்பு படிவங்களை நிரப்புவதற்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளின் தொகை மதிப்பு (01.06.2010) படிவங்களை நிரப்புவதற்கான செயலமர்விற்கு பாடசாலை அதிபரையும் பொறுப்பாசிரியர் ஒருவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைவாக அன்றைய தினம் பாடசாலை பட்டோலையும் ஆசிரியர் பட்டோலையும் பூர்த்திசெய்ய வேண்டி இருப்பதால் அதற்குரிய தகவல்கள், தரவுகளுடன் வருகை தருமாறு தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி கோட்டத்திலுள்ள மூன்று பாடசாலைகளான நாகர்கோவில் மகாவித்தியாலயம், குடத்தனை அ.த.க. பாடசாலை, மணற்காடு றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றுடன் பருத்தித்துறை கோட்டத்திற்குப்பட்ட பாடசாலைகள் அனைத்தையும் இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ். புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் இச் செயலமர்விற்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி கோட்டத்தில் உள்ள அடுத்த மூன்று பாடசாலைகளான அம்பன் அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை அ.மி.த.க. பாடசாலை,குடத்தனை றோ.க.த.க. பாடசாலை உட்பட கரவெட்டி கோட்டப் பாடசாலைகள் அனைத்துக்குமான செயலமர்வு எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெறுமென வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (2-19)

## விபத்துக்குள்ளான இளைஞர் சிகிச்சை பலனின்றி மரணம்

(இளவாலை)

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் வாகனம் கட்டுப்பாட்டையிழந்து மரம் ஒன்றுடன் மோதியதில் தலையில் பலத்த காயங்களுக்குள்ளான பிரஸ்தாபநபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த வே. சிந்துஜன் (வயது-17) என்ற இளைஞன் நேற்றுக் காலை 10.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் பேரம் பிள்ளையார் கோவிலடி மதவடியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்ததில் மரம் ஒன்றுடன் மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பயனின்றி உயிர் இழந்தார். (6-2)

# அன்டர்சன் மிரட்டல்; பாகிஸ்தான் பணிந்தது

# முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி

அன்டர்சனின் பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 80 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழக்க முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 354 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 29ஆம் திகதி நோட்டிங்காமில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 354 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மோர்கன் 130 ஓட்டங்களையும் கொலின்வூட் 82 ஓட்டங்களையும் ஸ்ரொரஸ் 45, திரோட் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மொகமெட் ஆசிப் 5 விக்கெட்டுக்களையும் மொகமெட் அமீர் 3 விக்கெட்டுக்களையும் உமர் குல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 184 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் உமர் குல் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும் சொகைப் மலிக் 38, மொகமெட் அமீர் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 5 விக்கெட்டுக்களையும் ப்பின் 3 விக்கெட்டுக்களையும் பிரோட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந் நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 172 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 262 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

அதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு 435 ஓட்டங்களை நிர்ணயித்தது இங்கிலாந்து அணி.

இதில் பிரிர் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் சுவான் 28, திரோட் 26, பிரோட் 24, பீற்றர்சன் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் உமர் குல் 3, சொகைப் மலிக் 2 விக்கெட்டுக்களையும் அமீர், ஆசிப், கனேரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


பதிலுக்கு 435 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தின் இடைவேளைக்கு முன் 80 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையிழந்து 354 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கனேரியா ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் இம்ரான் பர்காத் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 6 விக்கெட்டுக்களையும் பிரோட், ப்பின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக அன்டர்சன் தெரிவானார்.



## யூலியஸ், சர்மிளன் அதிரடியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யூலியஸ், சர்மிலனின் அதிரடி ஆட்டத்தினால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 210 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இச் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதனடிப்படையில் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்பமே கலக்கலாக அமைந்தது. ஆரம்ப வீரர்கள் தொடக்கம் முதலே அடித்து ஆட ஓட்ட எண்ணிக்கை ஓவரிற்கு 7 என்ற விகிதத்தில் சென்றது. யூலியஸ், சர்மிலன் ஆகியோர் அதிரடியாக அரைச்சதம் கடந்துஅணியினை வலுப்படுத்தினர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மத்திய க்ல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களையும் இழந்து 314 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் யூலியஸ் 54 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 70 ஓட்டங்களையும், சர்மிலன் 34 பந்துகளில் 57 ஓட்டங்களையும், சஞ்சயன், சௌமிதரன், அலெக்ஸ் முறையே 46, 26, 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 55 ஓட்டங்கள் கிடைத்தது. பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக கஜன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 314 என்ற இமாலய வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக்கல்லூரி தொடக்கம் முதல் விக்கெட்டுக்களை அடுத்தடுத்து பறி கொரடுத்தது.

இறுதியில் 31.4 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 210 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கிரிசாந், நிதர்சன், பிரதீபன் முறையே 25, 21, 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக சௌமிதரன் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், நிரூபன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

## 3-வது டெஸ்டில் யாருக்கு வாய்ப்பு; யுவராஜ் சிங்கா? ரெய்னாவா?

## குழப்பத்தில் அணித்தலைவர் தோனி

(கொழும்பு)

இலங்கை, இந்திய அணிகள் மோதும் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் நாளை கொழும்பில் ஆரம்பமாகின்றது இப்போட்டியில் இந்திய அணியில் யுவராஜ் சிங்கிற்கா, ரெய்னாவுக்கா வாய்ப்பளிப்பது என குழப்பத்தில் அணித்தலைவர் தோனி உள்ளார்.

3 டெஸ்ட் போட்டித்தொடரில் காலியில் நடந்த முதல் டெஸ்டில் இலங்கை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கொழும்பில் நடந்த 2-வது டெஸ்ட் சமனிலையானது. இதனால் இலங்கை 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை கொழும்பில் ஆரம்பமாகிறது.

தொடரை சமன் செய்ய இந்த டெஸ்டில் இந்தியா வெற்றி பெற வேண்டிய நெருக்கடி உள்ளது. கடந்த டெஸ்டில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக காம்பீரும், காய்ச்சல் காரணமாக யுவராஜ்சிங்கும் ஆடவில்லை. இதனால் முரளி விஜய், சுரேஷ் ரெய்னாவுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

விஜய் 58 ஓட்டங்கள் எடுத்தார். சுரேஷ் ரெய்னா தனது அறிமுக டெஸ்டில் சதம் அடித்தார். யுவராஜ்சிங்கின் இடமான 6-வது வீரர் வரிசையில் களம் வந்து முத்திரை பதித்தார்.

தற்போது யுவராஜ்சிங் நல்ல உடல் தகுதி பெற்று விட்டார். சுரேஷ் ரெய்னாவும் நல்ல நிலையில் உள்ளார். இதனால் 3-வது மற்றும் கடைசி டெஸ்டில் இந்த இருவரில் யாரை தேர்வு செய்வது என்பதில் தோனி குழப்பத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

முதல் டெஸ்டில் யுவராஜ் சிங் முதல் இன்னிங்சில் அரை சதம் அடித்தார். 2-வது இன்னிங்சில் மோசமாக ஆடினார்.

கங்குலி ஓய்வு பெற்றதால் யுவராஜ்சிங்குக்கு டெஸ்ட் அணியில் நிரந்தர இடம் கிடைத்தது. ஆனால் அவர் டெஸ்டில் முத்திரை பதிக்கும் வகையில் ஆடியது இல்லை என்றாலும் தோனி அவரை கை கழுவிவிடமாட்டார்.

யுவராஜ்சிங் ஒரு சிறந்த சுழற்பந்து வீரர் என்பதையும் அவர் கவனத்தில் கொண்டு உள்ளார். இதனால் போட்டி நடைபெறும் தினத்தில் தான் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்பது தெரியவரும்.

டெஸ்ட், ஒரு நாள் போட்டி மற்றும் இருபது - 20 ஆட்டம் ஆகிய 3 நிலைகளிலும் சதம் அடித்த ஒரே இந்திய வீரர் சுரேஷ் ரெய்னா என்பது குறிப்பிடத்தக்கது.

காம்பீர் உடல் தகுதி பெறவில்லை என்று கூறப் படுகிறது. இதனால் தமிழக வீரர் முரளி விஜய்க்கு தொடர்ந்து வாய்ப்பு கிடைக்கும்.







சில்லாலை புனித யாகப்பர் ஆலய 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலரினை யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை வெளியிட்டுவைக்க மக்கள் வங்கியின் முன்னாள் உதவி பிராந்திய முகாமையாளர் ஹென்றிக் பெற்றுக்கொள்வதையும் பங்குத் தந்தை அருட்திரு இருதயதாஸ் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

யாழ்.மக்களுக்கு வரப்பிரசாதமான
நிதி நிறுவனமாக

ட்ரேட் பினான்ஸ் அன்ட்
இன்வெஸ்ற்மென்ஸ் லிமிட்டெட்

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)

தனது கிளையை தமிழ் மணம்
கமழும் யாழ்.மண்ணில்

இன்று கோலாகலமாக ஆரம்பிக்கிறது

இடம் : இல. 74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: காலை 9.45

மிகக்குறைந்த காலத்தில், மிகக் குறைவான ஆவ
ணங்களுடன், விரைவானதும், தரமானதுமான
சேவையை வழங்குகின்ற உங்கள் பங்காளன்

TRADE FINANCE & INVESTMENTS LTD

(APPROVED BY THE CENTRAL BANK OF SRI LANKA)

T.P.: 0212221898 / 1900
FAX: 0212221899
E-mail: tradefij@sltnet.lk

(C-794)

## சர்வகட்சிப் பிரதிநிதிகள்...

அதன் முக்கிய விடயங்களைச் செய்தியாளர்களிடம் சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்தார்கள்.

தற்போது இந்தக் குழு மீண்டும் கூடுவதற்கான நேரம் வந்துள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

சர்வகட்சிக் குழுவில் உறுப்பினர்களாக இருந்த 13 அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஒருமித்து ஏற்றுக் கொண்ட விடயங்களின் அடிப்படையில் அவ் அறிக்கை அமைக்கப்பட்டது.

அந்த ஆவணம் இதுவரை கையொப்பமாகவில்லை. அதில் கையெழுத்தாகும் முன்னர் ஜனாதிபதியின் அனுமதியைப் பெற வேண்டும் என்று முடிபு செய்யப்பட்டது.

அப்படியே ஜனாதிபதிக்கு அது அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பின் ஜனாதிபதி உரிய காலத்தில் தனது கருத்தைத் தெரிவிப்பதாகக் கூறினார்.

அப்படியான கருத்தை வெளியிட்ட பிறகு பல கட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் கூட்டி அவரது எண்ணம் பற்றிக் கருத்துக் கேட்டேன். பிறகு ஆவணத்துக்கு இறுதி வடிவம் கொடுத்து கையொப்பம் இடலாம் என்று முடிபு செய்யப்பட்டது.

அந்தக் கூட்டம் இன்னும் இடம்பெறவில்லை. அதுதான் தற்போதைய நிலைமை.

**குழுவின் அறிக்கை**
**ஜனாதிபதியின் கையில்**

எது எப்படியிருந்தாலும் இறுதியில் அந்த அறிக்கையை அமுல்செய்வது ஜனாதிபதியின் கையில்தான் உள்ளது. இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அமைத்தவர் அவர்தான். எனவே அறிக்கை அடிப்படையில் எந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவரிடமேயுள்ளது.

அறிக்கை பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் கருத்தும் பெறப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் கூறினார்கள்.

அந்த நிலை இன்னமும் வரவில்லை. எனவே ஒரு முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ளது என்றுதான் கூற முடியும். அந்தக் குழு அனைத்து விடயங்கள் குறித்தும் ஆராய்ந்தது.

அங்கு அரசியல் ஆவணத்தைத் தயாரிக்கும், முன்வைக்கும் முக்கியமானதென்று கருதப்பட்ட 21 அரசியல் விடயங்கள் குறித்து விவாதித்தனர்.

அது எதிர்காலத்தில் எழுதப்படக் கூடிய ஒரு அரசியல் சாசனத்திற்கு அடிப்படையாக இருக்கும் என்று நாங்கள் கருதினோம். ஆனால் எங்களுக்கு அப்பாற்பட்டு அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர் ஜனாதிபதிதான்.

இந்த அறிக்கை குறித்துத் தற்போது ஜனாதிபதிதான் கருத்துக் கூற வேண்டிய நிலையில் இருக்கின்றார். அவரது கருத்து கிடைத்தபிறகு இந்த இறுதி ஆவணத்தைத் தயாரித்து அது உறுதிகளாக இருக்கும் என்று கருதுகின்றோம்.

இதேவேளை தற்போது நாட்டில் யுத்தம் முடிந்து விட்டது என்று அரசு அறிவித்துள்ள நிலையிலும் இந்தக் குழு மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும்,

முன்னர் இந்த கூட்டத்தில் பங்குபெறாமல் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இதில் கலந்து கொள்ளும்படி மீண்டும் அழைப்பு விடுக்கப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த திஸ்ஸ விதாரண,

நாங்கள் மீண்டும் கூடுவதாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பதென்றால் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆனால் ஜனாதிபதியின் கருத்துக்கள் கிடைக்கப் பெறும் வரையில் நான் ஏதும் சொல்ல முடியாது என்றார். (ச-3)

---

## அவுஸ்திரே...

கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகோட்டியையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர். (ச)

மாபெரும் ஆடித் தள்ளுபடி அதிரடி விலைக் கழிவுடன் ஜூலை 26 முதல்
யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில்

AHIEZER SUPPLIERS இல்

கண்கவர் நிறங்களில் India, Malaysia விலிருந்து
நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன மற்றும் சாதாரண



Commode (கொமேட்) வகைகள்
Squatting Pan வகைகள் மற்றும்
S-LON PE+ தண்ணீர் தாங்கிகள்
முதலானவை விசேட விலைக் கழிவுடன்
140mm, 160mm, 225mm PVC Pipes & Fittings

நியாய விலையில்

PVC குழாய்களும் அதன் பொருத்துக்களும்
மின்சார உபகரணங்கள்
Causeway Paints
காவி வகைகள்

முந்திக் கொள்ளுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே

Bath Room Titles
All kind of Large Diameaters
PVC Pipe & Fittings Available
Import PVC Fittings

விரையுங்கள்...

AHIEZER SUPPLIERS
289, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 021 510 0700
காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

(C-764)

## மரண அறிவித்தல்

### வினாசித்தம்பி சுப்பிரமணியம்



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி) 2010.07.31 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, மாணிக்கம் தம்பதியினரின் மூத்த மகனும், வேதாரணியம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நடனேஸ்வரியின் பாசமிகு கணவரும், கேமாவதி (ஆசிரியை, யா/டிறிபேக் கல்லூரி), தயாபரன் (நில அளவையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

அற்புதரவியின் மாமனாரும், கனகம்மா, வேலாயுதபிள்ளை, மங்கையர்க்கரசி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை, திருவிளங்கம், கோபாலபிள்ளை, இராசலட்சுமி மற்றும் கமலாவதி, சிவமூர்த்தி (ஓய்வு பெற்ற நில அளவை அலுவலகர்), தியாகராசா (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) ஆகியோரின் மைத்துனரும்,

நவபாலகுமாரன், வசந்தமலர், சிவயோகமலர், தேவகுமாரன், தவமணி, மலர்விழி, ஐங்கரன், யாமினி, மதிவதனா, சந்திரகலா, சசிகலா, சிவகலா ஆகியோரின் மாமனும் செந்தில், தயாளினி, தர்மினி ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (2010.08.02) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரிக்காடு (மட்டுவில்) மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தோப்பு ஒழுங்கை, மட்டுவில்.
தொ.பேசி:- 021 300 1372 (C-789) - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.